ஸ்ரீ

பகவத்கீதை வெண்பா.

வாதிகேஸரி

ஸ்ரீ அழகியமணவாள ஜீயர்

அருளிச்செய்தது.

மூன்றாவது ஷட்கம்.

ஸ்ரீரங்கம்:
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1907.

PREFACE.

WITH the publication of this third Shatka our pleasant task of bringing to light this 'ancient' and 'precious' work is finished. We take this opportunity to thank the Press and the Public for the kind and enthusiastic reception they have accorded to this 'rare Tamil classic'. Besides the numerous kind notices in the Press throughout the Presidency, we have been favoured with several letters from various Tamil scholars scattered all over the country, expressing their unbounded admiration at this unique work. Surely it has been a rare find and once again we thank Mr. Anbil S. Venkatachariar Avl. for having unearthed this precious gem. Now that the complete book is before them, we are sure the Tamil-knowing Public will judge of it as a whole and appreciate its invaluable merits.

SRIRANGAM,
1st June 1907.

T. K. Balasubrahmanyam.

அத்யாயம் 13.

க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விபாகயோகம்.

கன்ம முயிருணர்வாற் கட்டவரு முன்றூறு
நன்மையிறை பத்தி நடுவாறு—தன்மையுடன்
காயமுயி ரீசன் கருமமறி வன்புவகை
யேயவமைந் தேலுமீ ரூறு.

ஈங்கு மகலாசி யேய்ந்தபதின் மூன்றுமோத்
தாங்குடல மாருயி ராப்புறுத—னீங்குநெறி
தன்மையுடன் மற்றுந் தகைமைபெறச் சேரதித்த
நன்மையுடன் சொல்லு நயந்த.

இந்தச் சரீர மிகல்விசயா கேத்திரமென்
றந்தப் பரிசறிவா ராய்ந்துரைப்பார்—முந்திதனை
யீங்கறிவான் கேத்திரஞ்ஞ னென்றமுயி ரென்றவனை
யாங்கறிவார் சொல்வா ரமைந்து. 1

கேத்திரங்க ளெங்குமமர் கேத்ரஞ்ஞ னென்னைப்
பார்த்தறிவு மேவுநீ பார்த்தனே—சேர்த்த
விவையிரண்டு மற்றறியு மிந்தவறி விங்கு
நவையிலறி வென்றறிவ னன். 2

அக்கேத் திரம்யாதா மாங்கெவ்வா றெவ்விகற்பு
மிக்கெதிலா மெம்மயமாய் மேவுமருந்—தக்கவிவன்
றானேவ னெத்தகையோன் சார்ந்தசுருக் கத்ததனை
யானோர்ந்து சொல்லக்கே ளிங்கு. 3

போத முனிவர் புகல்வர் பலவகையே
வேதம் விவிதக்கால் வேறுபட—வோதுமது
வேதாந்த சூத்திரங்கள் வேறுரைக்கு மேதுவுடன்
மீதார்ந்த நிச்சயத்தான் மிக்கு. 4

பூதங்கள் பூதாதி புத்தி பிரகிருதி
யோதிந்தி யம்பதினொன் றைம்புலனேந்—தீதில்வரு
மிச்சைசின மின்பதுன்ப மேலுமுடல் சேதனைதா
துச்சிருப்பி தாகுஞ் சுருக்கு. 5

இவ்வியல்பிற் கேத்திரந்தா னின்னே சுருக்காக
வவ்வினைசேர் காரியத்தோ டாய்ந்துரைத்தேன்—செவ்
வுருயிரின் றன்மை யறிவா முபாயங்கள் [வியுட
சேருநெறி கேண்மின் சிறந்து. 6

மானமுட னேடம்பம் வன்கொலையின் மாறுநிலை
யானபொறை செவ்வை யமர்குருவின்—பானணுகல்
சுத்தியமர் வுற்ற துணிவுடைமை சூழ்மனத்தைச்
சித்தி யளவுஞ் செறுப்பு. 7

இந்தியங்கள் சார்பொருளி லென்றுந் துறந்திருத்தல்
வந்தியிலு மாங்கார மற்றொழிதல்—புந்தியினாற்
சென்ம மரணஞ் செரைநோய்சேர் துக்கமாம்
புன்மை யுணரும் புணர்ப்பு. 8

நின்ற நசையறுத னேர்புதல்வர் தாரமனை
யொன்று மனமங் கொழிவித்த—லென்றுஞ்சம
னார்ந்தே யிருத்த லுகப்புவெறுப் பாம்பொருள்கள்
சேர்ந்து வரலிற் றெளிந்து. 9

என்பா லனன்னியமா யேய்ந்துபுறம் யோகாத
வன்பாரும் பத்தி யமர்வுறுத—லின்பார்
தனியிடத்திற் சார்தல் சனங்குழுவு கண்டால்
நனியுகப்புச் சேரா நலம், 10

ஆருயிரின் மேலறிவி லாய்ந்தென்று நின்றமர்வு
பேறுணர்வாந் தத்துவத்தின் பீடறிவு—சீருடைய
மெய்ஞ்ஞான மாமதென மிக்குரைத்தேன் வேறுளது
பொய்ஞ்ஞான மாகும் புறம். 11

இவ்வறிவா லெய்து முயிர்தன்னை யீங்குரைக்கே
னெவ்வறிவா னல்லமுத மெய்தலாஞ்—செவ்வையதி
லாதியில தெற்பரமா யான்ற பிரமமா
மீதிலதுண் டென்றுரைப்ப தில். 12

எங்குங் கரம்பாத மெங்குங்கண் சென்னிமுக
மெங்குஞ் செவியா மியல்புடைத்தாய்—இங்குலகி
லெப்பொருளுந் தன்றகவா லேய்ந்து பரந்துநிற்கு
மப்பொருளின் றன்மை யது. 13

எல்லாப் புலனியல்வு மேய்ந்தே விளங்குமதா
யெல்லாப் புலனியல்வு மில்லையா—யெல்லாந்
தரிக்குமொரு தத்தற்றுச் சார்குணமூன் றின்றி
விரித்ததனைத் துய்க்கும் மிக. 14

பூதங்க ளுக்குள் புறம்புமாய்த் தானின்று
மீதங் கியல்வதுமாய் மேவியே—போதத்து
நுண்ணிமையி னுன்மிகவு நோக்கரிதாய்த் தூரத்து
மண்ணிமையி னுலருகு மாம். 15

வேறுபா டற்றவது வேற்றுமைசேர் பூதத்து
வேறுபா டுற்றதுபோன் மிக்கிருக்குங்—கூறுபா
டுற்றபொருட் டான்பரிக்கு முண்ணுமுண் டாக்குமென
மற்றறியத் தக்கதது வாய்ந்து. 16

சோதிகளின் மிக்கதுதான் சோதியாய்த் தொக்கதம
மீதுபர மென்னுமுரை மேவுமதாய்ப்—போதமெனத்
தானறிய லாவறிவாற் சாருமதா யாவர்க்கு
மூனமற வுள்ளிருக்கு முற்று. 17

இப்படியாற் கேத்திரமு ஞானத் தியல்வகையு
மெய்ப்படியா ஞேய வியப்பதவுந்—தப்பறவே
யரன்றிரளச் சொன்னேனென் பத்தனு யீதறிந்து
தான்றிகழ்ந் தென்மயனுஞ் சார்ந்து. 18

சித்து மசித்து மநாதியெனச் சிந்திநீ
யத்தில் விகார மணிகுணங்க—ளொத்தெழுந்து
பந்தமுறு வித்தாகும் பந்தமொழி வித்தாகும்
வந்தனைவெண் ணுற்று மதி. 19

காரிய காரணங்கள் கர்த்தா வியற்றுமிடத்
தேய பிரகிருதி யேதுவா—மேயசுகந்
துக்கம் புசிக்குந் தொடர்பதனி லேதுவா
யொக்க வரும்புருட னுற்று. 20

வாய்ந்த பிரகிருதி நின்ற புருடனதி
லேய்ந்த குணத்தி னியல்பெய்துந்—தோய்ந்தகுண
சங்கமடி யான சதசத்தாம் யோனிகளிற்
றங்க வவர்பிறப்பிற் சார்ந்து. 21

இவ்வுடம்பின் மேலாம் புருடன்கண் டேய்ந்திசைவா
னவ்வுடம்பு தாங்கி யதிற்றுய்ப்பான்—செவ்வியதிற்
றங்கியபே ரீசனுய்த் தான்பரம வான்மாவா
யிங்கியம்பப் பட்டா னிவன். 22

இந்தப் புருடனையு மிந்த வசித்தினையு
மந்தக் குணங்களுட ஞய்ந்தறிவா—னெந்தவவன்
எவ்வாறு மேவு மியல்பாற் றிரிந்திடினு
மிவ்வா றவன்பிறவா னிங்கு. 23

மிக்கார் சிலர்நெஞ்சால் மெய்ப்பரதி யானத்தாற்
றக்கா ருயிர்காண்பர் தாஞ்சிலர்கள்—எக்கால
சாங்கியயோ கந்தன்னுற் றங்கரும யோகத்தா
லாங்கறிவர் வேறுசில ராய்ந்து. 24

மற்றிங்கவ் வாறறியார் மன்னறிவார் பாற்கேள்வி
யுற்றன் புடனே யுபாசிப்ப—ரற்றமா
வந்த வவரு மரும்பவத்தைத் தாங்கடப்பர்
இந்த மிகக்கேள்வி யேய்ந்து. 25

எவ்வளவு நின்றியலு மிந்தப் பொருளுண்டா
மவ்வளவு தன்னை யடல்விசயா—விவ்வகையே
சித்து மசித்துஞ் சிறந்த புணர்ப்பதனு
லொத்தியல்வ தென்றே யுணர். 26

ஒத்துப் பொருளனைத்தி லுள்ளே யமரவிருந்
தத்துப் பரமேச னாகியே—தத்துவங்கள்
மாயு மளவதிலு மாயா தவனைக்கண்
டாயுமவன் கண்டா னமைந்து. 27

எவ்விடத்துந் தானிறையா யேய்ந்திருக்கு மிவ்வுயிர்தா
னவ்விடத்தி லொத்தியல்வ தாவறிவா—னிவ்விடத்திற்
றன்னைத்தன் னெஞ்சதனாற் றனலியான் றனடையும்
பின்னைப் பரகதியாம் பேறு. 28

ஏய்ந்த பிரகிருதி யித்தாற் கருமமெல்லாம்
வாய்ந்தியலு மென்றறிந்து மன்னுயிரை—யாய்ந்திவ
கத்தா விவனென்று காண்பா னெவனவனே [னைக்
சத்தா முணர்வுடையான் றான். 29

எப்போது பூதத் தியல்வேறு பாட்டினையு
மொப்பொருவா வொன்றி லுறுவகையுந்—துப்போ
பந்தப் பரப்புமுணர் பாங்கனப் போதுயிரா [டார்
மந்தப் பிரமமடைந் தாம். 30

இங்ஙனையு மாதி யிலனாற் குணமிலனாற்
பங்கடலோ விந்தப் பரமான்மா—தங்கியுடல் [யான்
நின்றிடினுங் கௌந்தேயா நேரொன்றுந் தான்செய்
என்றுமதிற் றோய்விலனே மேய்ந்து. 31

ஓங்குவிசும் பெங்கு முளதாயு நுட்பத்தா
லாங்கதனிற் றோயா ததுபோலத்—தாங்குடல
மேதிலுநின் றாலு மிலகுமுயி ரவ்வண்ண
மாதியல்வாற் றோயானு மங்கு. 32

எவ்வா றிரவிதா னிந்த வுலகனைத்து
மிவ்வா றெழில்விளக்க மெய்துவிக்கு—மவ்வாறு
பாரதனே யிவ்வுடல மெல்லாம் பரந்துயிர்தான்
சீரதனுற் றான்விளங்குஞ் சேர்ந்து. 33

காய முயிரிவற்றின் கண்ணார் பிரிவவ்வா
றேய வறிவா மெழிற்கண்ணான்—மேயவுடல்
வீடமர்வு தானு மிகவுணர்வார் தாம்பரமாம்
பீடமர்வர் தன்மையினைப் பெற்று. 34

இத்தன்மை யாலுடலு மிவ்வுயிருஞ் சேர்ந்தியலு
மத்தன்மை யாமாப் பவிழ்விரகு—மெய்த்தன்மை
யோர்ந்த பதின்மூன்று மோத்திற் குரைத்தமுடிக்
தாய்ந்தபொரு ளாய்ந்தோ மறிந்து.

அத்யாயம் 14.

குணத்ரய விபாகயோகம்.

முக்குணங்கள் பந்தத்து முட்டுகின்ற நேர்பதுவு
மக்குணங்க ணீக்குவிக்கு மவ்விரகு—மிக்குயர்ந்த
கீதை பதினாலா மோத்துக் கிளர்ந்துரைக்கும் .
போதத் தியல்பாற் புரிந்து

மற்றுமுனக் கின்ன மனவறிவின் மேலறிவை
யுற்றுணரும் வண்ண முரைக்கின்றே—னற்றமறை
யாதறிந்து மாமுனிவ ரிப்பவம்விட் டெய்தினார்
மீதமருந் தன்மையினை மிக்கு.

இந்த வறிவை யினிதார்ந்திங் கென்னொப்பா
மந்த வுயர்வை யடைந்தவர்கள்—பந்தமுடன்
சற்கத்தி லும்பிறவார் தாந்துயரஞ் சாரார்க
ளொற்கப் பிரளயத்தி னுள். 2

மிக்க பிரமம் விறல்யோனி யென்றுரைக்கத்
தக்க தெனதசித்திற் சார்வுபெறத்—தொக்கவுயிர்
கெற்பத்தை யான்சேர்ப்பன் கேழ்கிளரும் பூதங்க
ளுற்பத்தி சேருமிதி லுற்று. 3

இங்குலகில் யோனிகளா மெத்திறத்து மூர்த்திகளா
யங்குதயஞ் செய்யு மவைதமக்குப்—பங்கமிலா
விந்தப் பிரமமே யோனி கருவளிக்கு
மந்தப் பிதாநானே யாங்கு. 4

சத்துவ ரசோ தமமாய்ச் சாருங் குணமூன்று
மொய்த்த பிரகிருதி யுள்ளவையா—மித்தகைய
வாருயிரைத் தேகத் தமரப் பிணிக்குமே
சீருயருந் தோளாய் செறுத்து. 5

ஆங்கவற்றிற் சத்துவந்தா னன்றழுக்கற் றூர்தலினா
லீங்கொளி செய்தலுநோ யீடழித்துப்—பாங்கில்
வருஞ்சுகத்தில் மற்றறிவின் மன்னுநசை தன்னாற்
பொருந்துயிரைக் கட்டும் புணர்ந்து. 6

ராகமதின் றன்மை ராசதமாங் கௌந்தேயா
தாகமுடன் சங்கந் தனைவிளைக்கு—மாகவினை
மற்றதுதான் கன்மத்தில் வன்னசையாற் றேகிதனை
யுற்றமரக் கட்டு முறைத்து. 7

தம்மறிவு கேடுதருந் தானறிநீ மோக
மமருயிர்கட் கெல்லா மளிக்குந்—தமமென்று
தேர்ராமை சோம்ப லுறக்கத்தாற் பார்த்தனே
சோராமற் கட்டுந் துணிந்து. 8

சத்துவம தின்பந் தனிற்றுவக்குந் தானிரசத்
தொத்தியலுங் கன்மந் துவக்குவிக்கு—மைத்தும்
மன்னறிவு தன்னை மறைத்திட்டோர்ப் பின்மையினிற்
றுன்னமிகத் தான்றுவக்குஞ் சூழ்ந்து. 9

முக்குணங்க டம்மின் முதற்குணந்தான் மற்றிரண்டு
மொக்க வமுக்கி யுறமேலா—மிக்க
விடைக்குணந்தான் பார்த்தனே மற்றிரண்டு மிங்கே
கடைக்குணமு மவ்வாறு காண். 10

பொறிவாயி லெங்கும் புணரு மொளியா
மறிவான தெப்பொழுதுண் டாகுங்—குறியாலே
மன்னுடம்பி லப்பொழுது வாய்ந்துயருஞ் சத்துவமா
மென்னுமது தானறிவா யிங்கு. 11

ஈயாமை வீணுழற்றி யேய்ந்தகரு மத்தொடக்கஞ்
சாயா புலனெழுச்சி தன்னுசை—யோயாம
லுண்டா மிவைகண்டா யுற்றிரசத் தோங்கதனல் .
வண்டாருந் தார்விசயா மற்று. 12

மன்னுமுணர் வில்லாமை யொன்றின் முயல்வறுதன்
மன்னுமுயி ரோர்ப்பின்மை மாமோக—மென்னுமிவை
மீதி லுயர்தமத்தின் மேவுமவை யாகநீ
கோதில் குருமுதல்வா கொள். 13

சத்துமிக் கோக்கந் தரும்பொழுதிற் றன்மரணத்
தொத்துடம்புவிட்டவுயிருடையோன்—றத்துவத்தின்
மேலறிவு சேர்ந்தார் மிகவமல மாங்குலத்துச்
சாலவவன் றன்பிறக்குஞ் சார்ந்து. 14

கன்மநயந் தோர்குலத்திற் காதலுடன் றன்பிறக்கும்
வன்மையிர சத்துயர்வின் மாய்ந்தவவ—னன்மையிலா
மூட ரிடைப்பிறக்கு முழுதந் தமத்துயர்வில்
பீடை யுறமரித்தான் பின். 15

நீதி கருமத்து நின்மலமா நற்பயனைக்
கோதின் முதற்குணத்தே கூறுவரான்—மீதியலுந்
துக்க மிடைக்குணத்திற் சூழ்பயனும் பிற்குணத்திற்
றக்க வறிவின்மை தான். 16

முற்குணத்தி லாகு முழுதுணர்வு தானிடையி
லற்குணத்து லோப மதுவுண்டாம்—பிற்குணத்தி
லோராமை மோக முணராமை யுண்டாகுஞ்
சீரார் புகழ்விசையா சேர்ந்து. 17

மேலடைவர் முற்குணத்தோர் மேவு நடுக்குணத்தோர்
சாலநடு வாமுலகிற் றானிற்பர்—ஞாலத்துப்
பின்னுங் குணத்தியல்வோர் பீடழிவர் கீழ்மையினை
யெந்நாளுஞ் சேர விழிந்து. 18

மிக்க குணமவற்றில் வேறுபட்ட கர்த்தாவைத்
தக்க வுணர்வுடையோன் றானுணரான்—ஒக்ககுணந்
தன்னிற் பரமெனவுந் தன்னறிவான் சேருமே
யென்னிற் பரத்தன்மை யேய்ந்து. 19

இங்குடல மேவியம ரிக்குணங்கண் மூன்றினையு
மங்கும் வகைகடந்து மன்னினவன்—றங்கு
பிறப்பிறப்பு மூப்புப் பிணிவிடுத்துத் தன்னுஞ்
சிறப்பமுதஞ் சேருஞ் சிறந்து. 20

இவ்வளவிற் பார்த்த னியம்பினு னிங்கிறைவா
வவ்வகைசேர்முக்குணத்தையாங்கன்றேன்—எவ்வகை
சேருமடையாளத்தன்செய்தொழிலேதெங்ஙனே [யிற்
சீருடனித் தைக்கடப்பான் செப்பு. 21

ஈண்டவனுக் கண்ண லியல்பின் றகவுரைத்தான்
பாண்டவனே முந்திப் பரந்தவொளி—மூண்டியற்றி
மோகமுள வற்றை முனியான்முன் மூண்டத்து
வேக நசையிலான் மிக்கு. 22

முன்னுக் குதாசீனன் போலிருக்கு முக்குணங்க
டன்னுற் றலைந்திடினுந் தான்சலியான்—மன்னுகுணச்
செய்தியிது வென்றிருக்குஞ் செய்தொழிலிற் சேட்டி
மெய்திருந்து நெஞ்சுடையான் மேல். [யான்

தன்சுகத்துந் துக்கத்துந் தான்சமனாய்த் தன்னமர்ந்து
பொன்கலுடனோடி தனிற்புந்தியொத்தோன்—அன்பர்
வெறுப்பரிடை யொப்போன் மிகுபழிநன் கீர்த்தி
நிறுத்தசம நிற்கு நிகழ்ந்து. 24

தன்னமரு மானமவ மானஞ்சா ரானண்ப [வருஞ்
ஞென்னலர்தம் பக்கத்து மொத்தியல்வான்—மன்ன
செய்ம்முயற்றி யெல்லாஞ் செய்யா னவன்குணங்கண்
மெய்ம்முயற்றி யாற்கடந்தான் மிக்கு. 25

என்னைப் புறம்போகா யோகமாம் பத்தியினென்
மன்னப் பயின்று மருவுமவன்—றன்னமரப்
பேசுகுணஞ் செற்றுப் பிரமமாந் தன்மையினை
மாசில்குணஞ் சேர்ந்திடுமே மற்று. 26

குன்றா வமுதக் குணப்பிரம மாமுயிர்க்கு
நன்றா மிருப்பிடந்தா னானவ—னின்றாருந்
தன்மைப் பயனுக்குந் தானொருமை சார்சுகமா
நன்மைக்கு மென்று நயந்து. 27

கட்டுதலுங் கர்த்தாவாந் தன்மையுமக் கட்டவிழ்ப்பு
விட்டுத் திகழமுதின் மேவுதலுந்—தொட்டுவரு
முக்குணத்தின் சார்வா முயன்றுபதி னாலாமோத்
துக்குமுறை யோரு முணர்ந்து.

அத்யாயம் 15.

புருஷோத்தமயோகம்.

மன்னு மசித்தின் மருவியமர் சித்தெனுமா
வுன்னு முயிர்வகையி லுத்தமனை—மன்னியறைய்
மீதுள் பரந்து பரித்திறையாய் மேவினனை
யோதும் பதினைந்தா மோத்து.

மீது முதலாய் மிகுசாகை கீழாக
வோது முலகர் முயராசைப்—போதுந்
தளிர்கள் மறையாகத் தானுணர்வா னந்த
வொளிகொண் மறையுணர்ந்தா னுற்று. 1

கீழ்தனிலு மேலுங் கிளைகளதுக் குப்பரந்து
தாழ்வில் குணத்துயருஞ் சார்புலன்கள்—சூழ்தளிரா
மூலங்கீ ழும்பரக்கு முன்னை வினைத்தொடர்பாய்
ஞாலத்தின் மேலமர்ந்து நன்கு. 2

இத்தி னுருவு மிதின்முடிவு மாதியுமற்
றத்தி னிருப்பு மறிவரிதாம்—மொய்த்தமர்ந்த
மூலவர சாமிதனை முற்று மறுத்தறவாங்
கோலவலிச் சத்திரந்தான் கொண்டு. 3

ஆங்கதனு லிப்பதந்தா னாராய்தற் காகுமே
லீங்கதனிற் சென்று லினிமீளார்—பாங்கதற்குப்
பற்றுவா நாகப் பரனையெவ னுன்மன்னு
முற்றுமியல் வுண்டா முயன்று. 4

மானமோ கங்களின்றி மற்றுநசைக் குற்றமற்
றூனவுயிர்த் தன்மையமர்ந் தாசையது—தானகன்றே
யின்பமிகு துன்ப விருமைவிட் டிங்குணர்வோர்
மன்பதமே தாமடைவர் வாய்ந்து. 5

அந்தவுயிர்ச் சோதியினை யாதித்தன் சந்திரனுஞ்
செந்தழலுந் தாம்விளக்கஞ் செய்யார்க—ளெந்தவுயிர்
தானடைந்தார் மீளார்க டாம மஃதெனக்கே
யானவகை நீதா னறி. 6

என்னுரு மம்சமா யிவ்வுலகிற் சீவனுய்
முன்னா நின்று முயலுமுயிர்—தன்னுரு
மைம்புலனு நெஞ்சு மவையாறை யும்வலிக்கும்
வெம்புலத்துச் சேர விரைந்து. 7

எந்தவுடல் விட்டெவ் வுடலடையு மீசனவன்
சந்தமுட னங்கிவற்றைத் தான்வாங்கிப்—பந்தமுடன்
றூனேகும் வாயுத்தன் சார்மணங்கள் வாங்கியே
பூநேர்நின் றேகுமது போல். 8

செவிகண் டுவக்குடன் சிங்குவைநா சிச்சேர்ந்
தவிமின்றி நெஞ்சோ டமர்ந்து—நவிவில்லாய்
புன்பொருள்க ளெல்லாம் புசித்தியலு மிவ்வுயிர்தா
னின்புறுதல் சேர்நசையா லிங்கு. 9

இந்தவுடல் விட்டேக லேய்ந்து மிதிலிருந்தும்
வந்துபுசித் துங்குணத்தின் மன்னிவனை—வந்தறிவின்
மூட ருணர முகயறியார் முற்றுணர்வர்
நாட வுணர்வழியார் நன்கு. 10

மன்னுகரு மத்து மருவியல் யோகியர்க [னுணரு
டன்னுடம்பின் மேவிவனைச் சார்ந்துணர்வார்—முன்
னெஞ்சமில் லாதார் நிறைவின்றித் தாமுணரா
ரெஞ்ச லறவியன்று மிங்கு. 11

ஆதித்தன் பானின் றனைத்துலகுந் தான்விளக்குஞ்
சோதிச் சுடர்சோமன் சூழங்கி—மீதிலகி
மன்னுமொழி தன்னின் வனப்பதுவு மன்னனே
யென்னதென வுற்றறிநீ யேய்ந்து. 12

பூதலத்தின் மேவியே பூதங்க ணான்றரிப்பன்
மீதடர்த்து நின்ற மிகுமிடுக்காற்—சீதளஞ்சேர்
சோமனென நின்றமுதஞ் சோர்ந்தே பயிரெல்லாஞ்
சேம முறநிறைப்பன் சேர்ந்து. 13

நானமர்ந்து நின்றுலகி னூடு முயிருடலி
லூன மறவளரு மொள்ளெரியாத்—தான்கலவா
வேல்வகைசேர் வாயு விரண்டா லறப்புசிப்ப
னால்வகைசே ரன்னத்தை நன்கு. 14

எல்லா ரிதயத் திருப்பேனா னென்னாலே
நல்லார் நினைவறிவு நாட்டமாஞ்—சொல்லார்ந்த
வேதங்கள் யாவைக்கும் வேத்தியனான் மேவுபயன்
மீதந் ததுவறிவேன் மிக்கு. 15

கண்ணா ருலகிற் கரனக் கரனென்றே
யெண்ணாம் புருட ரிவரிருவர்—பண்ணாரும்
பூதவுயி ரெல்லாங் கரனாம் பொருவில்சீர்
மீதவுயி ரக்கரனாம் வேறு. 16

ஆங்கிவரி லுத்தமனே யாம்புருட னன்னியனாய்ப்
பாங்கிற் பரமான்மா வென்றுரைத்தா—னோங்கியே
தாம்புகுந்து நின்றே தரித்துலக மூன்றிறையா
யோம்புமவன் குன்றாது மேல். 17

எத்தகவால் யான்கரன்மீ தேகியே யக்கரனு
முத்தனிலு முத்தமனு வுற்றுயர்ந்தே—னித்தகவால்
வேத முலகிவற்றின் மேவுபுரு டோத்தமனு
வோத வுரைசிறந்தே னுற்று 18

என்னையிங்கே யிவ்வண்ண மேய்ந்தபுரு டோத்தமனு
முன்னை யமர்வொழித்து முற்றுணர்ந்தான்—பின்னை
எல்லா யறிந்தே யென்னையடைந்து பத்தியுடன் [யவன்
செல்வானெவ் வாறுஞ் சிறந்து. 19

இன்னேயிச் சாத்திரமா யேய்ந்த மறைப்பொருளை
மன்னே யுரைத்தேனுன் மற்றிதனை—நன்னெறியா
வுற்றறிந்தா னேரே யுணர்ந்தானும் பார்த்தனே
மற்றனைத்துஞ் செய்தவனும் வாய்ந்து. 20

எனும் புருடோத் தமனை வேற்றத்தைச்
சால விறைவனே தானுரைத்த—மேலான
கீதை பதினைந்தா மோத்துக் கெழுமிகுசீர்ப்
போதப் பொருளுரைத்தோம் பூண்டு.

தெய்வாஸுர ஸம்பத் விபாகயோகம்.

அத்யாயம் 16.

தன்மையாற் றேவ ரசுரரென்னச் சார்பிறவு
நன்மைசேர் சாத்திரத்தி னுடுதலுந்—தொன்மைக்
கரைக்கங் கறிவுரைப்புக் காட்டுதற்குக் கீதை
புரைக்கும் பதினாறு மோத்து.

அஞ்சாமை நெஞ்சுதெளி வாய்ந்தறிவாம் யோகநிலை
யெஞ்சாத தான மிசைந்ததமந்—துஞ்சாத
வெச்ச மறையுரைத்த வேலலுந் தவமுயற்றி
நிச்சந் தணிற்செவ்வை நேர்ந்து. 1

கொல்லாமை மெய்ம்மை வெகுளாமை கோள்விடுத
லுல்லார் சமங்குறளைச் சொல்லாமை—எல்லாத்து
மேவுதயை தான்சலிப்பு மேவாமை மேன்மைநாண்
பாவுபொருட் சாபலந்தீர் பண்பு. 2

தேசு பொறைதிண்மை தூய்மை சினமறுதன்
மாசு நிகழ்மிசைசேர் மானமொழி—வாசலிவை
தெய்வமெனுஞ்சம்பத்திற்சேர்ந்தபிறந்தார்க்குண்டோ
மெய்வகையாற் பார்த்தனே மிக்கு. 3

தன்ம மிலாடம்பந் தன்செருக்குத் துன்மானம்
வன்மையுறு செற்றம் வளர்கொடுமை—நன்மை
யறியாமை பார்த்தனே யாசுரமாஞ் செல்வஞ்
செறிவாருக் குண்டாந் திறம். 4

தெய்வமெனுஞ் செல்வந் திகழ்மோக்கத் தாசுரந்தா
னைவகைசார் பந்தத்து நாடுறப்பா—மிவ்வகையாற்
சேர்ந்துயர்ந்த சீர்ப்பார்த்தா தெய்வமாஞ் சம்பத்தை
நேர்ந்துதித்தாய் சோகியே னீ. 5

பூத மிருவகையாய்ப் போருமே யிவ்வுலகி
லாதமருந் தெய்வமாங் காசுரமா—மீததனிற்
றெய்வம் விரித்துரைத்தேன் சேர்ந்துநீ யாசுரத்தை
மெய்வகைகேள் பார்த்தா விரித்து. 6

செய்கின்ற வில்லறமுஞ் செய்யாத் துறவறமு
நைகின்ற வாசுரர்க ணன்கறியார்—மெய்குன்றாத்
தூய்மையுட ளுசாரஞ் சொல்லின் பயனுய
வாய்மையுமற் றில்லையவர் மாட்டு. 7

இச்சகத்து மெய்யன் றிதற்கோர் நிலையில்லை
மிச்சவிறை யில்லென்று மேல்விழுந்து—பிச்சுரைப்பார்
தன்னிற்றான் காமத்தாற் சார்ந்தே பிறக்குமதென்
றென்னிற்றான் மற்றே தெனல். 8

இங்கிதுவே கண்ணாக வேவேற்றுத் தன்னறியா
தங்கியலும் புத்தி யறவறமாய்ப்—பொங்கு
கொடுந்தொழில ராகிக் குலவுலகைத் தீம்பா
லடுந்தொழில ராவா ரவர். 9

கிட்டாத காமத்தை யுன்னியது கிட்டும்வினைப்
பட்டாங் கறிவின்றிப் பாவத்தா—விட்டபொருள்
வாங்கிமத டம்பஞ்சேர் மானமுட னிங்குழல்வார்
தீங்கியன்று மல்விரதஞ் சேர்ந்து. 10

துங்கவள வில்லாதே தோற்றஞ்சேர் சிந்தையினைத்
தங்கண் முடிவளவுந் தாமருவி—யங்கமருங்
காமபோ கம்பரமாக் கண்டறுதி மேவுவரே
யேமமிது வல்லதிலை யென்று. 11

காமஞ்சே ராக்கை சதங்களாற் கட்டுண்டு
காமக் குரோதத்துக் கைவளர்ந்து—சேமமுட
ஞங்கதனைத் துய்ப்ப ரனியாய வத்தத்தை
யோங்கிமிகத் தாஞ்சேர்ப்ப ருற்று. 12

இதுபெற்றே னிப்போ திதுயா னினைந்த
திதுகிட்டு வன்மேலு மின்னே—யிதுவென்ன
தாயேயுண் டாகின்ற தாங்கதற்பி னித்தனமு
மேயேயுண் டாமெனக்கு மிக்கு. 13

இப்பகைவன்பட்டான்மற்றியாவரையுங்கொல்வேனன்
செப்பமிறைநான்போகிசித்தனுன்—மெய்ப்பொருளோ
மேவுவலி யோன்சுகிநான் மேற்குலநா னுகின்றே [ன்
னேவனென்ஞே டொப்பான்மற் றிங்கு. 14

நானே யெசிப்பேன் கொடுப்பே னனியுகப்பேன்
ரூனே யெனமோகஞ் சார்ந்தவர்க—ளுளநெஞ்
சோடியே மோகித் துறுங்காமத் தார்நரகிற்
கூடியே வீழ்வர் கொலைந்து. 15

தம்மைத்தாஞ் சம்மதிப்பார் தாமுயலார் தம்பித்துச்
செம்மைத் தனமானஞ் சேர்செருக்கா—லிம்மைக்கே
நாமவினை யால்யசிப்பார் நாட்டியலும் டம்பத்தாற்
சேமவிதி சேராது சென்று. 16

ஆங்காரம் வன்மை யதன்செருக்குக் காமமுடன்
தீங்கார் குரோதமத் சேர்ந்தவர்—பாங்காரத்
தம்பிறர்க டேகத்துச் சார்ந்தவெனைத் தான்வெறுப்பார்
வெம்பியசூ யைச்சுடரால் வெந்து. 17

ஆங்கென்னைத் தான்வெறுத்த வந்த நராதமரை
யீங்குழலு மிப்பவத்தி லென்றுநான்—றீங்குழலு
மாசுரமாம் யோனி யவைதன் னிடையெய்த
மாசுறவே தள்ளுவேன் மற்று. 18

உற்றுநிகழ்ந் தாசுரமாம் யோனிகளிற் பல்பிறப்பில்
முற்றுமறி வின்றியே மூடராய்க்—கொற்றவனே
யென்னை யடையாதே யீங்கதனிற் ருழ்ந்தகதி
தன்னடைவ ரென்றுந் தளர்ந்து. 19

மாநரகின் வாசலாய் மன்னுமிவை மூன்றுயிருக்
கீனமா நாச மியற்றுமவை—தானமருங்
காமங் குரோத முலோபங் கடிதிவற்றி
னேமஞ் செறுநீ நவிற்று. 20

இந்த வறிவுகேட்டுக் கிம்மூன்றும் வாசலென
வங்கறிந்து விட்டோ னரசனே—சங்கையறத்
தன்னன்மை யாசரிக்கத் தன்மைப் பரகதியா
மிந்நன்மை சேரு மெழுந்து. 21

விட்டமருஞ் சாத்திரத்தின் மேய விதியையெவ
னிட்டமிகத் தன்னு லியல்கின்ருன்—றட்டறுசீர்ச்
சித்தியது சேர்ந்தடையான் சேரான் சுகம்பரமா
முத்தியது சாரான் முதிர்ந்து. 22

மன்னிச் செயுமதுவு மற்றதுவு முற்றறிவு
தன்னிற் பிரமாணஞ் சாத்திரமே—யென்னுமதா
லந்த விதான மறிந்தே கருமத்தை
மூந்த வியனீ முயன்று. 23

இப்படியே தேவா சுரமா மியல்வதனைத்
தப்பறுசீர் ஞானத் தகுநிலைமைக்—கொப்பாப்
பகர்ந்தசீர்க் கீதைப் பதினா மோத்தில்
நிகழ்ந்தபொருண் முற்றியது நேர்ந்து.

சிரத்தாத்ரய விபாகயோகம்.

அத்யாயம் 17.

ஆசாமாங் கானமை சாத்திரந்தான் சாத்திரத்திற்
றேசடைய கன்மஞ் செறிகுணத்தாற்—பேசநெறி
சேர்ந்தேயிம் முக்குணங்கள் செப்புமே மூவகையா
வோர்ந்தே பதினேழா மோத்து.

மேவியசீர்ப் பார்த்தன் வினவுரைத்தான் கண்ணனே
பாவியசீர்ச் சாத்திரத்தின் பாங்கொழிந்திங்—கோவா
விருப்பற் றியல்வார்க்கு மிக்ககுண மூன்றி
லிருப்பே தினியுரையா யிங்கு. 1

ஐயனவ னுக்காங் கறிய வுரைசெய்தான்
செய்ய கருமச் சிரத்தைதான்—மெய்யமருந்
தன்மையான் முக்குணத்தின் சார்வாகு மூவகையாம்
பன்மைநீ கேளாய் பயின்று. 2

நீடுலகி லெல்லார்க்கு நெஞ்சுக் கனுகுணமாய்
பாடுபெறு மிந்தப் பருஞ்சிரத்தை—நாடுஞ்
சிரத்தையுரு வாம்புருடன் சேர்ந்தே சிரத்தை
யுரைத்ததெவற் காங்கவனு முற்று. 3

சத்துவத்தர் சார்வமரர் தாமியக்க ரோடரக்கர்
மத்தியத்தர் சேரும் வகையதுதான்—புத்திசெறு
புன்மைத் தமோகுணத்தர் பூதம் பிரேதகணந்
தன்னைச் சமைந்தனைவர் தாம். 4

கோரமாய்ச் சாத்திரத்திற் கூறாத் தவந்தன்னைச்
சேரவே யாரியல்வால் டம்பமுடன்—ஈரமிலா
வாங்காரங் கூடி யதிகாம ராகங்கள்
தீங்காகுந் திண்மை செறிந்து. 5

உற்றவுடற் பூதங்க டன்னை யொருநின்றே
மற்றதனுண் மேவுயிராய் மன்னெனையும்—பற்றற்
றறவருந்து விப்பரவ ராசுரமாம் புத்தி
மறவ ரெனநினைநீ மற்று. 6

எவர்க்குந் தானுகப்பா மூணெச்ச மேய்ந்ததவ
மேவத் தகுதானம் வேறுபடப்—பாவுங்
குணந்தன்னுன் மூவகையாக் கூறியவப் பேத
முணர்ந்திங்கே கேளிதனை யுற்று. 7

வாணாண் மனந்தெளிவு மன்னுவலி நோயாமை
பூணாஞ் சுகமுகப்பைப் பொங்குவித்து—மாணார்ந்த
தித்தித்து நெய்த்துத் திரமாய் மனோகரமா
யொத்திடுமே முற்குணத்தி னூண். 8

[தா

காழ்த்துப் புளித்துப்பாய்க் கைக்கொதித்துத் தான்கடி
யாழ்ச்சிக் கொடிதா யழல்விளைத்து—மூழ்ச்சியினிற்
றுக்கஞ்சோ கம்பிணியைச் சூழ்க்கு நடுக்குணத்தி
னொக்க வுகந்துண்ணு மூண். 9

காலங் கழிந்து அழிந்திரதந் துற்கெந்தித்
தேல மிகப்பழகி யெச்சிலாய்ச்—சாலப்
படைத்தமுதுக் காகாத பாவச்சோ றாகுங்
கடைக்குணத்தா னுண்ணுங் கணக்கு. 10

வேண்டா ததிற்பயனை வேதவிதி மேவிமணம்
பூண்டா ரியல்வாகப் புந்தித்து—மூண்டாங்கு
தாம்யல்வ ரெச்சந் தகவான் முதற்குணத்தி
லாமெனவே கொள்க வறிந்து. 11

சேர்ந்த பயனினைந்தும் டம்பம் பொருட்டாயுஞ்
சார்ந்த தெதுபரதர் தந்தலைவா—கூர்ந்த
மனத்தாலவ் வெச்சத்தை வாய்ந்தறிநீ யந்த
வினத்தா விடைக்குணத்த தென்று. 12

விதியற் றவியற்று மந்திரமும் விட்டே
யதின்மேவு தக்கணையு மற்றுக்—கதிசேர்ந்த
வேலுஞ் சிரத்தையிலா வெச்சங் கடைக்குணத்தாற்
கோலு மெனவுரைப்பர் கூர்ந்து. 13

காயஞ் சொலவுமனங் காட்டுந் தவங்களவை
மேய குணங்கண் மிகுநெறியா—லாயவெனின்
மூன்றதனி னின்று முயலும் படியுரைக்க
வேன்றதனைக் கேணீ யினி. 14

தேவர் மறையோர் குருக்கண் மிகவுணர்ந்தோர்
மேவ வருச்சித்தன் மெய்தூய்மை—யோவாத
செவ்வை மகளிரிடைச் செல்லாமை கொல்லாமை
யிவ்வகைகா யத்தவமா மிங்கு. 15

அஞ்சா வகைசொல் லதன்மெய் யுகப்பிதமாத்
துஞ்சா மறையின் சொலின்வலியா—லெஞ்சாத
வாக்கதனி னின்றும் மருவுதவ மென்பரே
யூக்க மனமுடையோ ருற்று. 16

மனந்தெளித னன்கறிதல் வாயுரையை மீட்ட
னினைவுமனஞ் சேர நிறுத்த—லினமியல்வு
சேராத தூய்மையிவை சித்தத்துச் சேர்தவமென்
றோராய்வர் ஞானத் தவர். 17

முக்கரணஞ் செய்தவங்கண் மூன்றுவித மார்வமுயர்ந்
தொக்க வருபயனை யுள்ளொழித்துத்—தக்கவர்கள்
செய்யுந் தவத்தைச் சிறக்கின்ற முற்குணத்தென்
றய்யு மவருரைப்ப ருற்று. 18

நாடு நலநினைந்து கொண்டாடி நன்கிறைஞ்சத்
தேடு மனநினைந்து டம்பத்தாற்—பீடுறவே
யேய்ந்ததவ நில்லா திடைக்குணத்த தாய்ச்சலித்து
மாய்ந்தறுமென் றேயுரைப்பர் மற்று. 19

மூட மதியான் முயல்வுற்றுத் தம்முயிர்தான்
பீடை மருவப் பிறர்கேடு—கூடவே
யுற்றதவ மான துடனே கடைக்குணத்தைப்
பற்றவரு மென்பர் பயின்று. 20

வேறுப காரத்தை வரும்பா தியல்வென்று
கூறிடங் காலநலங் கொள்பவனைத—தேறியே
தான்கொடுக்குந் தானந்தான் சத்துவத்தி னின்றுமேல்
வான்கொடுக்கு மென்பர் மதித்து. 21

மீண்டுபகா ரங்கொளவும் வேறுபல மிச்சித்தும்
பூண்டு மிகவருந்திப் புன்பொருள்கள்—வேண்டுநெறி
யிட்டியலுந் தான மிடைக்குணத்தின் பாங்கதனிற்
பட்டியலு மென்பர் பலர். 22

தேசகா லஞ்சிறப்புச் சிந்தியா தேற்பவன்பா
லாசின்மை பாரா தவமதித்து—நேசஞ்செய்
யாதரிப்ப தில்லாத வத்தானம் பிற்குணத்தை
மீதரிப்ப தென்றுரைப்பர் மிக்கு. 23

ஓந்தற் சத்தென்னு முறைமுயன்று மொண்மறையாய்
வாய்ந்த பிரமத்தின் மன்னியவ—ரேய்ந்திவ்
விலக்கணத்தா லந்தணர்கள் வேதங்க ளெச்சங்
கலக்க மறவுண்டான் காண். 24

ஆதலா லோமென் றமர்ந்துரைத்தே யந்தணர்க்கு
வேதநின் றோதும் விதிவகையே—போதமுட
னெச்சந்தா னந்தவங்க ளெல்லாமெக் காலத்து
மிச்சந்தன் ஞனடக்கு மேல். 25

நெஞ்சாற் பலத்தை நினையாதெச் சந்தானந்
துஞ்சாத் தவமுத்தி தொன்மைநினைந்—தெஞ்சாம
லொத்தங் கியலு முயர்ந்த தெனச்சொல்லு
மெத்தென் றுரைக்குந் தரம். 26

உண்மையிலு நன்றான வொண்மையிலுஞ்சத்தென்னும்
வண்மையுரைதன்னை மதித்துரைப்பர்—திண்மையுயர்ந்
தேலுங் கருமத்தைச் சற்கரும மென்றுரைப்பர்
மாலும் புகழ்விசையா வாய்ந்து. 27

ஆங்கதனு லெச்சந் தவந்தான மாமிவற்றி
லோங்கமருந் தன்னிலையு முற்றவற்றிற்—பாங்கியலுஞ்
சத்தென் றுரைக்கத் தகுமென்று வேதியர்க
ளொத்தென் றுரைப்ப ருகந்து. 28

தான்விருப்ப மின்றிச்செய் தானந் தவமோமம்
வான்விருப்பத் தேற வழியாகா—வான்விருப்பாக்
காயத்தி னன்காகாக் காரணத்தார் றன்சத்தாய்
மாயத் துறுவிக்கு மற்று. 29

மேவு குணங்களினால் வேறுங் கருமங்கள்
பாவு சருதிப் பயில்வகையே—சேவையுறும்
பாங்குரைத்த கீதைப் பதினேழா மோத்ததனி
லீங்குரைத்தோ மிப்பொருளா லேய்ந்து.

மோக்ஷோபதேச யோகம்.

அத்யாயம் 18.

செய்கருமத் தீசனே கர்த்தாவாச் சிந்திப்பு
மெய்கருதஞ் சத்தவத்தின் மெய்ப்பாடு—மெய்கருமஞ்
சாருங் கதியுமிச் சாரத்தின் சாரமுமற்
றேரும் பதினெட்டா மோத்து.

சன்யாசங் கன்மத்திற் சாருந் தியாகத்தில் [ன்
முன்யான் பிறிவொருமை முற்றறியேன்—பின்பின்யா
தோன்றாது நீயிதனைச் சொல்லென்றான் பார்த்தனதற்
கேன்றங் குரைத்தா னிறை. 1

காமக் கருமங்கள் கைவிடுதல் சன்னியாசம்
சேமத்த தென்று சிலருரைப்பர்—ஏமத்தா
லெக்கருமப் பேறு மிகழ்வு தியாகமெனச்
சிக்கெனவே சொல்வர் சிலர். 2

ஏதம்போற் கன்ம மிகழப் படுமென்று
போதர் சிலருரைப்பர் புந்தியான்—மீதென்று
மெச்சந் தவந்தான மீங்கிகழ்வ தல்லவென
நிச்சஞ் சிலருரைப்பர் நின்று. 3

அந்தத் தியாகத் தறுதியினை யென்பாற்கேள்
சந்ததிகள் பாரதர்க டந்தலைவா—முந்துறவே
யான்பகர்ந்தேன் மூன்றுவகை யென்றே தியாகத்தைத்
தான்பயனச் சங்கந் தவிர்ந்து. 4

பாவியசீ ரெச்சம் பயிலுந் தவந்தானம்
மேவியிக ழாதென்று முற்றியல—மேவினவை
யாவின்பா லாங்கவைதா ஞான வறிவினர்க்கும்
பாவனமா மென்றும் பயின்று. 5

இக்கரும மான விவையென் சருமமென
மிக்கமருஞ் சங்க மிகுபயன்க—ளொக்கவிடுத்
தேய்ந்தவியல் வென்றே யியலுமதே யென்றனக்கிங்
காய்ந்த வறுதிமிக வாம். 6

என்று நியதமா மிந்தக் கருமங்க
ளொன்றும்விட விவனுக்கொண்ணுதா—னின்றிவற்றை
மோகத்தாற் றுன்விடுதன் முக்குணத்திற் பிற்குணத்தி
லாகத்தால் வந்த வது. 7

துக்கமெனக் கன்மத்தைத் தோன்று முடல்வருத்த
மிக்கபயத் தாற்செய்யா விட்டவன்றான்—சிக்கெனவில்
வாய்ந்த விடைக்குணத்தான் மற்றதுவிட் டப்பயனு
மேய்ந்த வறிவுபெறு னிங்கு. 8

நின்று நியதக் கருமத்தை நேர்ந்தியல்பென்
றென்று மியன்றே யிகல்விசையா—வொன்றிவருஞ்
சங்கம் பயன்றுறப்பார் சாருந் தியாகந்தா
னங்கந்த முற்குணத்த தாம். 9

தத்துவத்தி னின்றுந் தவிர்ந்தபயன் சார்ந்தறிவு
சத்துவத்திற் சந்தேகந் தானற்று—ஞெத்துவருந்
தீவினையி னல்வினையிற் சேர்வெறுப்பு சங்கமகை
யோவியிருப் பெய்து முகந்து. 10

காய முடையோன் கருமமெல்லாங் கைவிடுக
லாய வகையங் கரிதாகு—மேய
பலன்றுறந்தோ னன்றும் படிதுறந்தோ னென்று
நலஞ்சிறந்தோர் சொல்வர் நயந்து. 11

நன்றுந்தீ துங்கலந்து நண்ணும் பலமூன்றுப்
பொன்றுந் துறவா துடன்சென்றார்க்—கென்றுங்
கருமத்தி லொன்றிற் கருதுபயன் சாரா
தொருமைப் படத்துறந்தார்க் குற்று. 12

செய்யுங் கருமமெல்லாஞ் சிந்திக்க நீவிசையா
வுய்யு மதியறிதி யுற்றுணர்ந்த—வைவகைசேர்
காரணங்க ளென்பாற் கருத்தமர்ந்து கேட்டறிநீ
யாரணங்கள் சொல்லு மது. 13

நிற்கநிலை யாகுமுடன் னேர்ந்தவுயி ராங்கர்த்தா
வற்குநிழற் செய்கரண மற்றவைதா—னொற்கமிலாச்
சேட்டைபல பஞ்சமமாந் தெய்வவிறை தன்மத்துக்
கூட்டமாவ தாகவே கொள். 14

காயத்தால் வாக்காற் கருது மனந்தன்னால்
ஆயத்தான் செய்ய மருவிமுயல்—னேயத்தால்
நல்வினைக்குந் தீவினைக்கு நாட்டி லிவையைந்துஞ்
செல்வினையி லேதுவாஞ் சேர்ந்து. 15

இவ்வகையா லீசனாற் கர்த்தாவா மிவ்வுயிரிற்
செவ்வைமதி யாதுவெறுஞ் சீவனை—யெவ்வகையிற்
கர்த்தாவா மென்னவே காண்கின்ற றான்மதிதா
னொத்தாரும் புத்தி யுறான். 16

நான்செய்தே னென்று நடக்கு மனமின்றித்
தான்சேர் பயனதனிற் சார்வற்றான்—றான்சேரு
மிவ்வுலகைக் கொன்று மிவன்கொல்லான் கட்டுண்ணா
னவ்வினையிற் சேரா னவன். 17

அறிவாங் கறியப் படுங்கன்ம மத்தை
யறிவான் விதிமூன்ருே டாகுஞ்—செறிவார்
கரணஞ்செய் கன்மமதிற் கர்த்தாவா மூன்ருங்
கரணஞ்செய் கன்மத் தடைவு. 18

காணுணர்வுங் கன்மமுங் கர்த்தாவு மும்மூன்ருய்ப்
பேணுங் குணத்திற் பிரியுமவ்தன்—றேணுறவே
யக்குணஞ்சேர் தன்மை யறவுரைப்ப ராங்கதனை
மிக்குணர்ந்து மன்னுகேள் வேறு. 19

வண்ணச் சராம வகைசேரெஞ் ஞானத்துங்
கண்ணு ருயிரொருமைக் காட்சியாற்—றிண்ணா
வேறறவே நோக்கு மிகுமறிவைச் சத்துவத்திற்
சேறறிவா மென்றே தெளி. 20

வேறுபடு பூதங்கண் மேவுயிரும் வெவ்வேருய்க்
கூறு படும்வகையிற் கூடுமெனத்—தேற
மறிவை யிடைக்குணத்தி லாகியிவ் வண்ணஞ்
செறிவதென வேயறிநீ தேர்ந்து. 21

ஏதேனு மோர்கருமத் தெல்லாம் பெறலாமென்
ருதே நசைபண்ணி யற்பமாய்—மீதேயோர்
மெய்ம்மை யடையா வெறுமறிவு பிற்குணத்திற்
பொய்ம்மை புனையும் புணர்ந்து. 22

உக்ப்புவெறுப் பன்றி யுயர்நசையு மற்றே
மிகத்தனியல் வாமென்று மேவி—யகப்பயனி
லாசையொழிந் தாங்கியலு மக்கரும முற்குணத்திற்
பேசவரு மேலுயர்த்தி பெற்று. 23

காமநசை தன்னு லகங்காரக் காழ்ப்பினிற்
றுமருவு மாயாசந் தான்மிக்குச்—சேமமென
நின்றியலு மக்கரும நேர்ந்தே யிடைக்குணத்திற்
சென்றியலு மென்றுரைப்பர் தேர்ந்து. 24

துக்கத் தொடர்ச்சி பொருணசஞ் சூழ்பீடை
யொக்க வியல்வலிதா னென்றிவையுந்—தக்கறியான்
மோகத்தாற் செய்கரும முண்டேற் கடைக்குணத்தின்
வேகத்தா லாகுமே மிக்கு. 25

ஆர்ந்தபய னசை யதுவிட் டகங்காரந்
தீர்ந்துதிட னுய்முயற்றி சென்றியன்று—சேர்ந்துவரும்
பேரிழவில் வேறுபடாப் பீடுடைய கர்த்தாவாம்
வீறியலுஞ் சத்துவத்தான் மிக்கு. 26

புகழ்விரும்பிப் புன்பயனை வேண்டிப் பொருளை
மிகவவ்விப் பீடையினை மேவித்—தகவென்னுஞ்
சுத்தியுறு துட்களிப்புச் சோகத் துறுங்கர்த்தா
மத்திய மாங்குணத்தான் மற்று. 27

நன்மைத் தகானறிவு நண்ணான் முயற்றியுறான்
வன்மைச் சடன்மறத்தின் மன்னுவான்—புன்மைசேர்
மந்தன்சோம் பன்னெடுக வாதைநினை யுங்கர்த்தா
சந்தத்தாற் றாமதனாந் தான். 28

புந்தியிலுந் திண்மையிலும் பூணுங் குணப்பிரிவால்
வந்திவைதான் மூன்றாம் வகையதனைச்—சிந்தைதிகழ்ந்
தெல்லாம் பிறிவறிய யானியம்பக் கேளிதனை
நல்லாய் தனஞ்செயனே நன்கு. 29

துக்க வியலறமு மல்லறமுங் காரியமு
மிக்க வகாரியமு மேலச்சந்—தக்கவரு
மஞ்சாமை பந்தம்வீ டான்றறியும் புந்திதா
னெஞ்சா முதற்குணத்தா மிங்கு. 30

தன்மமு மற்றைய தன்மமுங் காரியமும்
புன்மைய காரியமும் போக்குத்தா—நன்மையுறக்
காணும் வகையன்றிக் காணலுறும் புத்திதான்
பேணு மிடைக்குணத்தைப் பேர்ந்து. 31

மேவுபொரு ளெல்லாம் விபரீத மாகவே
தாவுமிருள் சேர்ந்து தனஞ்செயனே—யாவதென
வொன்று மதன்மத்தை வேறுணரும் புத்திதான்
சென்று கடைக்குணத்தாஞ் சேர்ந்து. 32

உண்மையினா னெஞ்சை யுயிர்புலன்க ளுற்றசெயல்
வண்மையறி யோகத்து மன்னிவருந்—திண்மையினா
லுற்றே தரிக்கு முயர்திருதி பார்த்தனே
யற்றே முதற்குணத்த தாம். 33

தன்மகா மார்த்தங்க டன்னையே யாதினாற்
புன்மைசேர் தன்பயனாற் புந்தித்து—வன்மைசேர்
சங்க முடனே தரிக்கின்றா னத்திருதி
யங்க விடைக்குணத்த தாம். 34

மன்னு முறக்கம் பயஞ்சோகம் வாட்டமதந்
துன்னுமிவை யித்தனையுந் துன்மதியான்—மன்னி
யிடைவிடா தேமருவு மித்திருதி பார்த்தா
கடையிலா குங்குணத்தின் காழ்ப்பு. 35

தானமர்ந்து சேர்சுகந்தான் றன்குணத்தான் மூன்றுவ
யானபடி கேணீ யமர்விசையா—லூனமற [கை
மிக்கதனிற் சீலத்தான் மெய்யே யுகப்பெய்தித்
துக்கமுடி வுஞ்செறியுஞ் சூழ்ந்து. 16

எது முதல்விடம்போ லின்னாது பின்னதுதான்
மீது வளர்ந்தமுத மேயொக்கு—மோது முயிர்ப்
புந்தித் தெளிவுதரும் பொற்பார் சுகமதுதான்
முந்தித் திகழ்குணத்தின் மொய்ம்பு. 37

மூளும் பொறிபுலனுன் முன்னமுதம் போலாகி
மீளும் பொழுதில் விடம்போலே—நாளுங்
கொடுநிரையத் தேவீழ்க்கக் கூட்டுஞ் சுகந்தா
னடுத்திகழு மக்குணத்தி னட்பு. 38

தோன்றுழியிற் றுய்ப்பிற் றுளங்கா வுயிர்மயக்கி
யூன்றுறக்க மூண்மடிவோர்ப் பின்மையா—லேன்றுவருஞ்
மோகச் சுகமதுதான் முக்குணத்திற் பிற்குணத்த
தாகப் புகன்றா ரறிந்து. 39

பூமிமிசை மானிடரிற் பொன்னுலகின் மன்னுவா
ராமிமையோர் தம்மி லமர்ந்தொருவர்—தாமியலு
மூன்னைப் பிரகிருதி மூளுந்த முக்குணங்க
டன்னைப் பிரிந்ததிலைத் தான். 40

மாமறையோர் மன்னவர்கள் வைசியர்கள் சூத்திரர்க
ளாமனிசர்க் காகி யமர்தருமே—தாமருவுந்
தன்மை யமர்குணத்தின் சார்வுடனே வேறுபடு
நன்மை யமரு நயந்து. 41

சமந்தமஞ் சார்ந்த தவந்தன் னமர்ந்தசுத்தி
நமர்ந்த பொறைசெவ்வை ஞான—மமர்ந்த
விறையையறி வுண்மையுணர் விக்கரும மாகு
மறையவர்தந் தன்மை மதம். 42

சௌரியமு மிக்கொளியுந் தற்றுணிவுந் தன்சமத்தும்
வைரியமர் நாளுமை வாய்ந்தகொடை—சீரியவை
யொக்கவிய மிக்குமது மோங்கரசர் தந்தன்மை
தக்க கருமமாஞ் சார்ந்து. 43

காணி விளைப்பதுவுங் காலியவை காப்பதுவும்
வாணியமும்வைசியர்க்குவாய்த்ததொழில்—பேணியவர்
மூவர்க்கு மாளாய் முயலுமதே சூத்திரர்க்கு
மேவப் படுந்தொழிலா மிக்கு. 44

தந்தங் கருமத்துச் சார்ந்தே தருமபயன்
வந்தடைய லாகு மனிசர்க்குச்—சந்தமுடன்
றன்கரும நின்றொருவன் றன்சித்திச் சார்வகையை
நன்கமரக் கேணீ நயந்து. 45

எவன்பாற் பூதங்க ளெல்லாம் பிறந்தியலு
மேவன்றா னிங்க ணிடைப்பரம்பு—மேவியே
யாங்கவனைத் தன்கருமத் தாலே யருச்சித்தே
யோங்கவவன் சித்தி யுறும். 46

தன்கரும மல்குணத்தைச் சார்ந்திடினு மிக்கியன்ற
வன்கரும மானவது மற்றொன்றி—னன்கதுவாந்
தன்மைசேர் கன்மத்துத் தக்கியல்வான் சார்துயரப்
புன்மைசா ரான்போய்ப் புறத்து. 47

கூடப் பிறந்த கருமங் குறையுறிலும்
வீடப் படாது விசல்விசையா—பீடுற்ற
வெல்லா முயற்றியையு மேய்ந்தெரியத் தூமம்போற்
பொல்லாங்கு சூழும் புகுந்து. 48

எங்குந் துவக்கின்றி யேலு மனஞ்செயித்துப்
பொங்கு நசையில்லாப் போதத்தா—னங்குத்
தனையமர் சன்னியாசச் சார்வதனுன் மேவும்
வினையகன்ற மேலாம் வியப்பு. 49

செவ்வியுறுந் த்யானத்தின் சித்தியினைச் சேர்ந்தவவன்
எவ்வாறு தான்பிரம மெய்திஞ—னவ்வாறு
சேர்ந்த வதினிலையாஞ் சித்தி யதுசுருக்க
வார்ந்தெனது பானீ யறி. 50

கோதறுசீர்ப் புத்தியுடன் கூடித்தன் றிண்மையான்
மீதியலு நெஞ்சை மிகவடக்கித்—தீதமரு
மோசை முதற்பொருள்க ளுள்ளுறவிட் டொன்றிவரு
மாசை வெறுப்பவையு மற்று. 51

தக்கதனி யாமிடத்துச் சார்ந்தறிவு தான்சிறிதுண்
டொக்கவுரை காயநெஞ் சுள்ளொடுக்கி—மிக்கமர்ந்தே
யென்றுந் தியானமாம் யோகஞ்சேர்ந் தெவ்விடத்து
மொன்று நசைவிடுதே லுற்று. 52

ஆங்காரம் வன்மை யதிற்செருக்குக் காமமுடன்
றீங்கார் வெகுளிதான் சேர்சுற்றந்—தேங்காது
நீந்து மமதை நெகிழ்ந்தே நிகழ்சாந்தின்
வாய்ந்தபிர மத்தனும் வந்து. 53

தொன்மைப் பிரமவுயிர் தோன்றமன திற்றெளிந்து
புன்மைப் பலசோகம் பூணசையின்—றன்மையவித்
தெப்பொருட்குமொத்தென் பாலேய்ந்தபரபத்தியினைத்
தப்பறவே சேருஞ் சமைந்து. 54

எவனு னேவன்மற் றெவ்வளவி னுண்மையினு
லாவனுங் கென்னை யறிவதுதான்—மேவநிகழ்
பத்தியான் மெய்யுணர்ந்தே பண்பா லெனைப்பின்னை
முத்தியால் வந்தடையு முற்று. 55

மற்றிக் கருமங்க ளெல்லா மருவியெனைப்
பற்றிப் பயின்றென்றும் பார்த்தியல்வா—னற்றமரு
மேவு மெனதருளால் மிக்கடையு மற்சமற
வோவுதலி லாப்பதத்தை யுற்று. 56

நெஞ்சாற் கருமமெல்லா நேராக வென்னிடைவைத்
தெஞ்சாம லெற்பரனு யெந்நாளுந்—துஞ்சாத
புத்தியோ கத்தைப் புணர்ந்து பொருவிலென்றன்
பத்தியோ கப்பெறநீ பார்த்து. 57

என்னை நினைந்தநீ யென்றுமித் துற்கங்க
டன்னிகிரி லென்னருளாற் றன்கடத்தி—பின்னிதனை
யாங்காரத் தாலே யமர்ந்துநீ கேளாயேற்
றுங்காதிங் கேநசித்தி தான். 58

ஓங்குமகங் காரத்தி லுற்றே யுயர்சமர
மீங்குமுய லேனென் றிருத்தியே—லாங்குநிறை
மேவுந் துணிவதுவு மெய்யன்று தன்மையுனை
யேவுஞ் சமரத்தி லேய்ந்து. 59

தன்மையமர் தன்கருமந் தன்னாற் பிணிப்புண்டு
நன்மை யமர்ந்தவமர் நாணிநீ—யுன்மருவு
மோகத்தால் மீண்டிடினு மூண்டே யவசனாய்
வேகத்தாற் செய்வுதிநீ மிக்கு. 60

ஈச னவனொருவ னெல்லா ரிதையமாந்
தேச மதினிற்குஞ் சீர்விசையா—பாசமுட
னெல்லா வுயிர்களையு மாயையினா லேதிரிக்க
வல்லா னியந்திரத்தில் வைத்து. 61

அந்தவவன் றன்னையே யானுத வன்சரணைச்
சந்த முடனடைநீ தார்விசையா—முந்தவவன்
றன்னருளான் மேலான சாந்தியையுஞ் சாயாத
வன்பதமும் நீபெறுதி வாய்ந்து. 62

இவ்வாறு ஞானமுனக் கிங்கே யெழில்மறையிற்
செவ்வா மறைப்பொருளைச் செப்பினேன்—னெவ்வாறு
தன்னியல்வை யாராய்ந்து சாய்ந்ததனை யிச்சித்தாய்
நின்னியல்வாற் செய்நீ நிகழ்ந்து. 63

இன்ன மறைப்பொருள்கட் கெல்லா மிகமேலா
மென்னமருஞ் சொல்லி னிறுதிகேள்—முன்னமரு
மிட்டன் றிடனென்று மித்தா லுனக்கிதமாப்
பட்டதனைச் சொல்வன் பரிந்து. 64

என்னை மனனம்பண் ணென்பத்த னாகியே
யென்னை யருச்சி யெனைவணங்கு—என்னையே
மேவுதிநீ மெய்யுனக்கு மிக்கறுதி சொன்னேனு
னேவுதலற் றென்னுகப்பா லுறறு. 65

எல்லா வறங்களையு மிங்கறவிட் டென்னையே
நல்லார் சரணமா நண்ணியிடு—தொல்லாரும்
பாவங்க ணின்றனைப் பற்றுவிடு விப்பனன்
றாவந் தனையொழிநீ தான். 66

இப்பொருளை யில்லாத் தவத்தார்க்கு மென்னிடையின்
மெய்ப்பொருளாம்பத்தியிலாவீணர்க்குஞ்—சொப்படவே
யிச்சையுடன் கேளார்க்கு மென்னைப் பொறுதார்க்கு
மச்சமுற நீயுரையே லாங்கு. 67

இத்தகையின் மேலா மறைப்பொருளே யேவனென்றன்
பத்தரிடை நின்று பரிந்துரைக்கு—மத்தகையோ
னன்பாற் பரமமாம் பத்தியெய்தி யையமற
வின்பா லெனையடையு மேய்ந்து. 68

மானிடரி லாங்கவனின் மற்றொருவ னென்னுகப்பிற்
றுனியல்வு மிக்கவவன் றுனில்லை—மேனிசமூ
மெக்காலு மேதினியி லில்லையா மென்னுகப்பில்
தக்கார்வ மிக்கினியோன் றான். 69

நாமிருவர் நின்றியம்பு நல்லறஞ்சே ரிக்கீதை
பாமருவி யோதும் பரிவனெனைத்—தாமருவு
நெஞ்சறிவா மெச்சத்தா னேவே யிறைஞ்சினனென்
றெஞ்சலற யான்மதிப்ப னிங்கு. 70

சேர்ந்து சிரத்தையினைச் சேரா தசூயையினை
யார்ந்திதனைக் கேட்குநா னைவனும்—தீர்ந்துதுய
ரற்றே யறிவெய்து மன்புடையோர் தங்கூட்டம்
பெற்றே மகிழும் பெருத்து. 71

பார்த்தனே நின்னொருமை பற்றியாஞ் சித்தத்தாற்
சீர்க்கவிது கேட்டுச் சிறந்தாயே—பேர்த்துன்னை
மோகத்தைச் செய்மாய முற்றுங் கழிந்ததே
போகத்தைச் சேர்ப்பான் புணர்ந்து. 72

என்றிறையோன் சொல்ல வெழில்விசையன் செப்பிறு
னின்றியலு மோகம்போ யேய்ந்துமதி—நின்றநா
னுன்னருளினன் மயக்கமொன்றின்றிச்சென்றியல்வன்
சொன்னதெல்லாஞ் செய்வன் றுணிந்து. 73

இவ்வண்ண மாயனுக்கு மேந்துயர்சீர்ப் பார்த்தனுக்கு
மெய்வண்ணம் வார்த்தை விளைந்தபடி—செய்வண்ண
மீண்டேநான் கேட்டேனிவ் வற்புதத்தை யிவ்வுடலிற்
பூண்டே மயிரெறிவாம் பூண்டு. 74

சீரார் வியாதன் றிருவருளான் மிக்குயர்ந்த [மைக்
ஏரார் மறைப்பொருளா மியோகத்தைப்—பேராண்
கண்ணனவன் றானே கருத்தோ டுரைத்தருள
வெண்ணமுடன் கேட்டேனு னிங்கு. 75

மன்னவா கேசவனும் பூண்டவனும் வார்த்தையினைச்
சொன்னவா நானினையுந் தோறெல்லா—மின்னவா
றென்னவொண்ணு தற்புதமாயேல்கின் றபுண்ணியமாப்
பன்னவுகப் பாவன் பயின்று. 76

ஆங்குமிக வற்புதமா மண்ணல் வடிவினையு
மீங்குநினை தோறு மெழவியப்பா—யோங்கு
முகப்புமிகு மேன்மேலு முற்றென் றுரைத்தான்
மிகப்புகழ்சேர் சஞ்சயன்றான் மிக்கு. 77

எவ்விடத்தான் யோகத்துக் கீசனுங் கண்ணன்று
எவ்விடத்தான் வில்லேந் தெழில்விசய—னவ்விடத்தே
வாய்ந்த திருவிசையம் வாழ்வுவள நீதிதிட
மேய்ந்தனவென் றேமதிப்பன் யான். 78

தன்மைக் கருமந் தகுகுலத்தின் றாய்மையுட
னன்மை பயில்சார நன்கறியத்—தொன்மைப்
பரமனருள் கீதைப் பதினெட்டா மோத்தாஞ்
சரமமுரைத் தோர்ந்ததிது தான்.

உடலுயிரின் றன்மை யுறுகுணத்தின் பன்மை
யிடரிலெழி லீசன்ற னேற்றந்—திடவசுரர்
தேவ ரியல்வுதுணைஞ் சேர்கருமஞ் சார்ந்தமர்வு
மாவனபின் னறேத் தயர்ந்து.

பின்னுரை.

தாயகரு மங்களினாற் சத்வமிக வுண்டாக்கி
யெய்வுணர் வாலுயிரி னீறறிந்து—மாயனிடை
முத்தியுறுஞ் சிந்தை முயலாசை முன்பணிவாற்
பத்தியுறல் கீதைப் பயன். 1

எவ்வறமுஞ் சொல்லி யிறுவாஞ் சுலோகத்தாற்
செவ்வறமாந் தன்சரணைச் செப்புதலா—லவ்வறத்துந்
தான்றுணையா மாயன் றனித்துத் தனையளிக்கும்
வான்றுணையா மென்றிருத்தல் வாய்ப்பு. 2

நெஞ்சுட் கலந்தென்னை நேர்நினைத்து நூலிட்டுச்
செஞ்சுடர்சேர் தாற்பரிய தீபத்தாற்—பஞ்சவர்தந்
தேர்ப்பாகன் கீதைச் சிறந்தபொருள் காட்டினோ
னோர்ப்பாகு நன்றே யினிது. 3

மாய னருள்கீதை மன்னு பொருடன்னைத்
தூய பெரும்பூதூர்த் தொன்முனிதன்—மேய
தகையான் மணவாள மாமுனிவன் சொன்னான்
றொகையாரும் வெண்பாச் சுரந்து. 4

சொட்டை மணவாளத் தூய்முனிவன் சொற்செய்த
சட்ட மருவுந் தமிழ்ப்பாவாற்—கட்டெழில்சீர்க்
கோமா னருள்கீதை கூறும் பொருளுணர்வார்
சீமா னடிசேர்வர் சென்று. 5

பகவத்கீதைவெண்பா.

குறிப்புரை.

அத்யாயம் 13.

க்ஷேத்ர க்ஷேத்ரஞ்ஞ விபாகயோகம்.

1. இந்தச் சரீரம்—நான் தேவன், நான் மனிதன் நான் பருத்தவன், நான் இளைத்தவன் என்பதாகப் போக்தாவான ஆத்மாவோடு வேற்றுமையில்லாமல் ஒன்றுபட்டுத் தோன்றுகின்ற இந்தச்சரீரத்தை. இகல் விசயா—வெற்றியையுடைய அர்ச்சுனா. கேத்திரம் என்று—(சரீரத்தினும் வேறானதாய்ப் போக்தாவா யிருக்கின்ற ஆத்மாவின் போகத்துக்காக ஏற்பட்ட) க்ஷேத்திரம் என்பதாக. கேத்திரம்—க்ஷேத்ரம். இதனை எந

கறிவான் கேத்திரஞ்ஞனென்ற—'இதை நான் அறி கிறேன்' என்று எவன் அறிகின்றானோ அவன் (அறியப் படுவதான சரீரத்தினும் வேறாய் அறியுமவனாயிருக்கின்ற க்ஷேத்திரஞ்ஞனென்பதாக. உயிரென்றவனை ஆங் கறிவார்—ஆத்மாவின் உண்மைத்தன்மையை யறிந்த பேர்கள்.

2. சேர்த்த—சேர்மையையுடைய. இவை யிரண்டும் மற்றறியும் இந்த அறிவு—சரீரத்தையும் ஆத்மாவையும் வெவ்வேறு பிரித்து அறிவதோடு அவை யிரண்டும் என க்குச் சரீரமாய் இருப்பதனால் என்னுடைய ஸ்வரூபங் கள் என்று அறிகின்ற இந்த அறிவானது. நவையில் அறிவு—குற்றமற்ற ஞானம்.

3. விகற்பு—விகாரம். இவன்—க்ஷேத்திரக்ஞன். சருக்கத்து—சுருக்கமாக.

4. போத முனிவர்—ஞானிகளான பராசரர் முத லிய ருஷிகள். விவிதம்—பல்வேறு பிரிவாக.

5. பூதங்கள்—க்ஷேத்திரத்தை யுண்டாக்குந் திரவி யங்களான பிரதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என் கிற மஹாபூதங்கள். பூதாதி—பூதங்களுக்கு ஆதியான அஹங்காரம். புத்தி—புத்தியென்கிற மஹான். பிர கிருதி—அவ்யக்தமென்னப்படுகின்ற பிரகிருதி. இந்தி

யம் பதினென்று—(வாய், கை, கால், ஆஸநம், உபஸ்தம் என்கிற கர்மேந்திரியங்கள் ஐந்தும்; செவி, மெய், கண், நா, மூக்கு என்கிற ஞானேந்திரியங்கள் ஐந்தும்; மனம் ஒன்றுமாக) இந்திரியங்கள் பதினென்று. இந்தியம்—இந்திரியம். புலன் ஐந்து—சத்தம், பரிசம் உருவம், ரஸம், கந்தம் என்கிற இந்திரிய விஷயங்களான இவை. துச்சு—க்ஷேத்திரம். "துச்சிலிருந்து துயர்கூரா மாண்பினீதே" யென்றதுகாண்க. இருப்பு ஆகும்—ஆதாரம் ஆகும். (இதனால் பிரகிருதியாதியாக பிரிதிவி யீறாகவுள்ளபொருள்களினாலாக்கப்பட்டு, இந்திரியங்களுக்கு ஆதாரமாய், இச்சை சினம், இன்பம் துன்பம், என்று வேறுபட்டுப் பூதங்களின் தொகையாய்ச் சேதனனுடைய சுகதுக்க நுகர்ச்சிக்கு ஆதரமாயுள்ளதே பயனாகவுடையதுதான் க்ஷேத்திரமெனப்படும் என்று கூறியதென்க.)

7. மானத்தின் மாறு நிலை—அமானித்வம்; அதாவது உயர்ந்த ஜனங்களைத் திரஸ்காரஞ் செய்யாமை. டம்பத்தின் மாறுநிலை—இவன் தார்மிகன் என்று பிறர் தன்னைப் புகழவேண்டுமென்கிற எண்ணத்தினோடு தருமானுஷ்டானஞ் செய்யாமை. கொலையின் மாறுநிலை—பிறருக்கு ஹிம்ஸை புரியாமை. பொறை—பொறுமையுடைமை. அதாவது பிறரால் தான் பீடிக்கப்பட்டா

லும் சித்தவிகாரமடையாமை. செவ்வை—ஒழுக்கம். அதாவது, பிறர் விஷயத்தில் திரிகரணங்களும் ஒப்ப ஒழுகுதல். குருவின்பால் நணுகல்—ஆத்ம ஞானத்தை யுபதேசித்த ஆசாரியனை யடுத்துப் பணிந்து நிற்றல். சுத்தி—தூய்மை; அதாவது, ஆத்ம ஞானத்துக்கும், அதன் ஸாதனத்துக்கும் வேண்டியதாய்ச்சாஸ்திரத்திற் கூறிய மனோவாக்குக் காயங்களுக்குண்டான யோக்கியதையை யுடைமை. துணிவுடைமை—திடனுடைமை; அதாவது, அத்யாத்ம சாஸ்திரத்திற்கூறிய பொருள்களினிடத்தில் கலங்காத உறுதியுடைமை. மனத்தைச் செறுப்பு—மனத்தை நீக்கல்; அதாவது, ஆத்ம ஸ்வரூபத்தை யொழிந்த இதர விஷயங்களில் போகாமல் மனத்தை நிவர்த்தி செய்கை.

8. ஆங்காரமற்றொழிதல்—தேஹமேயாத்மாவென்கின்ற அபிமானம் ஒழிதலும், அப்படியே தனதல்லாத எல்லாப்பொருள்களினிடத்தும் தனது என்கின்ற அபிமானமொழிதலும். செரை—கிழத்தனம். புன்மை—சிறுமை. இதனை யுணர்தலாவது—சரீரம் இருக்கிறவரையில் பிறப்பு, இறப்பு, கிழத்தனம், நோய், துக்கம் என்கிற இந்த தோஷங்கள் ஒருபோதும் ஒழிக்கப் போகாதென்று உணர்தல்.

9. நின்ற நசை அறுதல்—ஆத்மாவையொழிந்தவைகளின்மீது நின்ற பற்றை யொழித்தல். புதல்வர் தாரம் மனை ஒன்றும் மனம் அங்கு ஒழிவித்தல்—பிள்ளை, மனைவி, வீடு இவைகளின் மீது பற்றுவைத்த மனத்தைத் தவிர்த்தல். என்றுஞ் சமன் ஆர்ந்தே இருத்தல் உகப்பு வெறுப்பாம் பொருள்கள்சேர்ந்து வரலில் தெளிந்து—இஷ்டமாய் ஸந்தோஷிக்கத் தக்கதும் அனிஷ்டமாய் வெறுக்கத் தக்கதுமாகிய பொருள்கள் கலந்துவரும் விஷயத்தில் இவை ஸங்கல்பத்தால் வருவன வென்று தெளிந்து மாறுபடாது இரண்டையும் சமமாகப்பொருந்தியிருத்தல்.

10. என்பால்—சர்வேசுரனான என்னிடத்தில். அன்பாரும் பத்தி யமர்வுறுதல்—அன்போடுகூடிய பக்தியைப் பொருந்தியிருத்தல். தனி இடத்திற்சார்தல்—ஜனங்களில்லாத பிரதேசத்தில் வாழ்தல். ஜனங்குழுவு கண்டால்—ஜனங்கள் கூடியிருக்குமிடத்தைக் கண்டால். நனி உகப்புச் சேராநலம்—மிகுதியும் விருப்பம் பொருந்தாத நலத்தையுடைமை.

11. ஆருயிரின் மேலறிவிலாய்ந்தென்று நின்றமர்வு—ஆத்மஞானத்தில் எப்போதும் நிஷ்டையுடைமை. தத்துவத்தின் பீடறிவு—தத்துவ ஞானத்தைத்தரும்படி

பெருமையுறச் சிந்திக்கை. சீருடைய மெய்ஞ்ஞான மாம்—இவைகளே சிறப்புடையதான மெய்ஞ்ஞான மாகும்.

12. இவ்வறிவா லெய்து முயிர்தன்னை யீங்குரைக் கேன்—(முன் 7-வது செய்யுளிற்கூறிய) அமானித்வந் தொடக்கமான ஸாதனங்களால் அடையவேண்டுவ தான பிரத்யக் ஆத்மாவின் ஸ்வரூபத்தை [அதாவது ஜீவஸ்வரூபத்தை] இப்போது சொல்லுகிறேன். நல் அமுதம் எய்தலாம்—பிறப்பு இறப்பு முதலிய பிரகிருதி தர்மத்தைக்கடந்த அமிர்தமென்கின்ற ஆத்மாவைப்பெற லாம். ஆதியிலது—ஆதியில்லாதது. எற்பரமாய்—எனக்கு ஆட்பட்டதாய். ஆன்ற பிரமமாய்—பெரிதான குணத்தோடு கூடினதாய்; அதாவது தேகத்தின் வேறானதாய் அத்தேக முதலியவற்றால் அளவிடவொண்ணாத தாய். இலது உண்டென்று உரைப்பது இல்—(காரிய காரணமாகிற இந்த இருநிலைமையுமில்லாத தாகை யால்) இதன் ஸ்வரூபம் அஸத் என்றாவது அல்லது ஸத் என்றாவது உரைப்பது ஸாத்யமில்லை.

13. அப்பொருளின் தன்மை—அந்தப் பரிசுத்த ஆத்ம ஸ்வரூபமானது. எல்லாப்பக்கங்களிலுங் கை கால்களையுடையது. [அதாவது கைகால்களாற்செய்யக்

கூடிய காரியத்தைச் செய்யக்கூடியதென்பதாம்.] அப்படியே எல்லாப்பக்கங்களிலும் கண், தலை, முகம் இவற்றையுடையது. எங்குங் காதுகளையுடையது. மேலும் உலகிலுள்ள எல்லாப்பொருள்களையும் வியாபித்துக்கொண்டிருப்பது.

14. எல்லாப் புலனியல்வும் எய்ந்து—எல்லா இந்திரிய வியாபாரங்களும் பொருந்தி. எல்லாப் புலனியல்வு மில்லையாய்—எல்லா இந்திரிய வியாபாரங்களும் இல்லாததாய். தத்து அற்று—[தேவாதி சரீரங்களில்] ஒட்டு இல்லாமலே. எல்லாந் தரிக்கும்—தேவாதிஸகல சரீரங்களையும் தரித்துக்கொண்டிருக்கும். குணம் மூன்றின்றி அதனை மிக துய்க்கும்—ஸத்வம் முதலான மூக்குணங்களு மில்லாததாயினும் ஸத்வம்முதலான குணங்களைத் திறமைமிகப் புஜிக்கும்.

15. பூதங்களுக்குட் புறம்புமாய்—பிருதிவி முதலிய பூதங்களைவிட்டுச் சரீரமின்றி வெளியிலுள்ளதாய். மீதங்கு இயல்வதுமாய்—அப்பூதங்களுக்குள்ளும் இருப்பதாய். நுண்ணிமையினுன் மிகவும் நோக்கரிதாய்—அதிக ஸூக்ஷ்ம மாகையால் தேகத்தைக்காட்டிலும் வேறானதொன்றென்று நோக்குதற்குக் கூடாததாய். தூரத்தும் அருகும் ஆம்—(அமாநித்வம் ஆதியான குண

ங்களையின்றி அவற்றிற்கு மாறான குணங்களையுடைய வர்கட்கு அவர்கள் தேகத்திலிருந்துகொண்டே) தூரத்திலிருப்பதாய் (அந்த நற்குணங்களைப் பொருந்தியவர்களுக்கு) அருகிலிருப்பதாயும் ஆகும்.

16. வேறுபாடு அற்ற அது—பிரிவினையில்லாத அந்த ஆத்ம வஸ்துவானது. வேறுபாடு உற்றதுபோன்றிருக்கும்—இவன் தேவன், இவன் மனிதன் என்று தேவாதி ரூபமாய்ப் பிரிக்கப்பட்டதுபோல மிகத் தோற்றிக்கொண்டு நிற்கும். அது கூறுபாடு உற்றபொருள்தான் பரிக்கும் உண்ணும் உண்டாக்குமென அறியத்தக்கது—அவ்வாத்ம வஸ்துவானது சரீரமாகச் சேர்ந்திருக்கின்ற பிருதிவி முதலிய கூறுபாட்டையுடைய பூதங்களைப் பரிக்கும்; அப்படியே பூதஸம்பந்தமானவைகளைக் கிரகிக்கும்; அப்படி கிரகிக்கப்பட்டு வேறுஉருவமாய் மாறுபடுகின்ற அன்னம் முதலியவைகளையும் உண்டாக்கும் என்று அறியத்தக்கது.

17. சோதிகளின் சோதியாய்—தீபம், சூரியன், இரத்தினம் முதலியவைகட்கும் ஒளியைத்தரும் சோதிவடிவானதாய். தொக்க தமமீது பரமென்னும் உரைமேவுமதாய்—சூழ்ந்துள்ள தமஸ்ஸு என்கின்ற சூக்ஷ்மப் பிரகிருதியைக் காட்டிலும் புறம்பானதென்று சொல்

லப்படுவதாய். போதமென—ஞானமே வடிவானதென்று.. யாவர்க்கும் ஊனமற உள்ளிருக்கும்—மனிதர் முதலான எல்லார்க்கும் மாசகல ஹிருதயத்தில் நிலைபெற்றிருக்கும்.

18. கேத்திரமும்—க்ஷேத்திரத்தின் உண்மையையும். ஞானத்து இயல்வகையும்—க்ஷேத்திரத்தைக் காட்டிலும் வேறான் ஆத்ம ஸ்வரூபத்தைப் பெறும் ஞானத்தின் உண்மை வகையையும். மெய்ப்படியாம் ஞேய வியப்பதவும்—க்ஷேத்திரஜ்ஞனுடைய உண்மையான தன்மையையும். ஈதறிந்து—மேற்கூறிய உண்மையை யறிந்த. என் மயனும்—என் ஸ்பாவத்தை [அதாவது ஸம்ஸாரத்துக்கு உட்படாமையை] அடையும்படியான நிலைக்கு வருவான்.

19. சித்தும் அசித்தும் அநாதியெனச் சிந்தி—பிரகிருதியும் புருஷனும் அநாதிகாலமாய்க் கலந்துகொண்டே வருகின்றனவென்று நீ அறிவாயாக. அத்தில்—பிரகிருதியில். விகாரம்—இச்சை த்வேஷம் முதலிய விகாரங்கள். அணிகுணங்கள்—அமாநித்வம் முதலிய நற்குணங்கள். விகாரம் பந்தமுறும் வித்தாகும்: அணிகுணங்கள் பந்தமொழி வித்தாகும் என்க.

20. காரிய காரணங்கள் கர்த்தா இயற்றுமிடத்து எயபிரகிருதி எதுவாம்—காரியமான சரீரமும், காரண

மான ஞானேந்திரிய மனஸ்ஸுக்களும் கர்த்தாவாய் நின்று ஒன்றைச் செய்யுமிடத்தில் பொருந்திய பிரகிருதிதான் காரணமாய் ஏற்படுகின்றது. சுகந்துக்கம் புசிக்குந் தொடர்பதனில்—சுகதுக்கங்களை யனுபவிக்கிற ஸம்பந்தத்தில். ஒக்கவரும் புருடன் ஏதுவாம்—பிரகிருதியோடு கலந்துவருகின்ற புருஷன் காரணமாகின்றான்.

21. வாய்ந்த பிரகிருதி நின்ற புருஷன்—பூர்வ பூர்வமான பிரகிருதியின் விகாரங்களான தேவர் மனுஷ்யர் முதலிய யோனி விசேஷங்களில் இருந்த இப்புருஷன். அதில் எய்ந்த—அந்த யோனிகளாற் பொருந்திய. சதசத்தாம் யோனிகளில்—நல்லதுங் கெட்டதுமான யோனிகளில்.

22. கண்டு எய்ந்து இசைவான்—உபதிருஷ்டாவாகவும் அநுமந்தாவாகவும் இருக்கிறான். உபதிருஷ்டா—கூடிப்பார்ப்பவன். அனுமந்தா—செய்யச் சம்மதிப்பவன். அவ்வுடம்பு தாங்கி யதிற்றுய்ப்பான்—தேஹத்தைப் பரித்து அதனல்வரும் இன்பதுன்பங்களை யனுபவிக்கிறான். பேரீசன்—மஹேசுவரன். பரமவான்மா—பரமாத்மா.

23. அசித்து—பிரகிருதி. அந்தக் குணங்களுடன் ஆய்ந்தறிவான்—இனிச்சொல்லப்போகும் ஸத்வம் முதலிய குணங்களோடு பிரித்து அறிபவன்.

25. அவ்வாறறியார்—ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு ஸாதனங்களான காமயோகாதிகளை யனுஷ்டித்தறிய அதிகாரமில்லாத சிலர். அறிவார்பால்—தத்துவந்தெரிந்த ஞானிகளிடத்தில். பவத்தைக் கடப்பார்—மரணாதிகளை யொழிப்பார்கள்.

26. நின்று இயலும் இந்தப்பொருள்—ஸ்தாவர ஜங்கமமான இந்தப் பிராணிகள். சித்தும் அசித்தும் சேர்ந்த புணர்ப்பதனால்—சேதனாசேதனங்களினுடைய சேர்க்கையினால். இயல்வது—உண்டாவது.

27. அத்துப் பரமேசனாகி—அந்தந்த தேஹம் இந்திரியம் மனம் இவைகளைக் குறித்துப் பரமேசுவரனாகி.

28. எவ்விடத்துந்தான் இறையாய்—தேவர் முதலான எல்லாச் சரீரங்களிலும் அவற்றிற்கு ஆதாரமாயும் ஆள்பவனாயுமிருக்கும் பதியாய். ஒத்தியல்வதா அறிவான்—(தேவாதிகள் போல் விகாரப்படாமல் ஞானமேவடிவாய்) ஒரே மாதிரியாக இருப்பதாய் அறிபவன். நலியான்—வருத்தப்படுத்தமாட்டான்.

29. 'ஆய்ந்திவனே' யென்றுள்ள தனிச்சீர் 'ஆய்ந்தவ' என்றிருத்தல் நேராகும். அங்ஙனங்கொண்டால், 'ஆய்ந்த, அகர்த்தா இவன் எனப்பிரித்து, அகர்த்தாவாயிருக்கின்றான் இந்த ஆத்மா எனப்பொருள்செய்து மூலபாடத்தின் கருத்திற்கு இசையும்படி கொள்ளலாம்.

30. பூதத்து இயல் வேறுபாட்டினையும்—(பிரகிருதி, புருஷன் என்று சொல்லப்படும் இந்த விரண்டு தத்துவங்களாயுள்ள தேவர் முதலிய) ஸகல பூதங்களிலும் தேவத்தன்மை, மானிடத்தன்மை, குறுகியிருத்தல் நீண்டிருத்தல் முதலிய வேறுபாடுகளையும். ஒன்றில் உறவகையும்—அவ்வேறுபாடுகள் பிரகிருதி யென்னும் ஒரு தத்துவத்தில் மாத்திரம் இருக்கின்ற வகையையும். பந்தப்பரப்பும்—அந்தப் பிரகிருதியினின்றும் உண்டாகின்ற புத்திரன் பவுத்திரன் முதலிய பந்தங்களின் விஸ்தாரத்தையும். அடைந்தாம்—அடைந்தவனாவான்.

32. விசும்பு—ஆகாசம். நுட்பத்தால்—சூக்ஷ்மமாயிருப்பதனால்.

33. இரவி—சூரியன். பிரகாசிக்கின்ற உலகத்தைவிடப்பிரகாசிக்கப்பண்ணும் சூரியன் விலக்ஷணனாய் விளங்குதல்போல, அறியப்படும் க்ஷேத்திரத்தைவிட

அறிகின்ற க்ஷேத்திரியஞன ஆத்மா விலக்ஷணனென்பது இச்செய்யுளின் கருத்து.

34. காயம்—க்ஷேத்திரம். உயிர்—க்ஷேத்திரஜ்ஞன். அறிவாங்கண்ணுல்-ஞானக்கண்ணுல். வீடு-விடுபடுதல்.

அத்யாயம் 14.

குணத்ரய விபாகயோகம்.

1. மேலறிவு—மேலான ஞானம், அதாவது பிரகிருதி, புருஷ விஷயமாய் அறிந்த எல்லா ஞானத்துக்கும் மேற்பட்டதான ஞானம். மீதமருந்தன்மையினை-ஸம்ஸாரமண்டலத்துக்குப் புறம்பான ஸித்தியை.

2. ஆர்ந்து—அடைந்து. சற்கத்தில்—சிருஷ்டியில்.

3. மிக்க பிரமம்—மஹாத்பிரம்மம். எனது அசித்தில்—என்னுடைய பிரகிருதியினிடத்தில். உயிர் கெற்பத்தை யான் சேர்ப்பன்—ஜீவனென்னும் கருப்பத்தை யான் தரிப்பிக்கிறேன். கேழ்கிளரும் பூதங்கள் உற்பத்தி சேரும்—(பிர்ம்மா முதலாகப் புல்லிறுதியாக

வுள்ள) விளங்கித்தோன்றுகின்ற ஸகல பூதங்களும் உண்டாகின்றன.

4. இந்தப் பிரமமே யோனி—பிர்ம்மமென்கின்ற இந்தப் பிரகிருதிதான் உற்பத்தி ஸ்தானம்.

5. பிரகிருதியுள்ளவையாம்—பிரகிருதியை விட்டுப் பிரியாமலிருக்கின்றவைகளாம். ஆருயிரைத் தேகத் தமரப்பிணிக்கும்—அழிவற்ற ஆத்மாவைச் சரீரத்தில் தானே தங்கும்படி கட்டுப்படுத்தும்.

6. அழுக்கற்று ஆர்தலினால்—நிர்மலமாய் இருக்கையால். சுகத்தில் அறிவில் மன்னு நசைதன்னால்—சுகத்திலும் ஞானத்திலும் பொருந்திய பற்றை யுண்டுபண்ணுவதனால்.

7. ராகம்—ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றுக்கொன்றுண்டான ஆசை. தாகம்—திருஷ்ணை; அதாவது சப்தாதி விஷயங்களெல்லாவற்றிலுமுண்டான வாசை. சங்கம்—ஸங்கம்; அதாவது புத்திரமித்திராதிகளைக் கட்டியணைக்கவேண்டுமென்னுமாசை. தேகி-புருஷன்.

8. மோகம் அளிக்கும்—வித்தியாஸமான ஞானத்தை யுண்டுபண்ணும். ஓராமை—பிரமாதம். சோம்பல்-

ஆலஸ்யம்; அதாவது கர்மத்தைத் தொடங்கிச் செய்யா மலிருக்கை.

9. துவக்கும்—கட்டுப்படுத்தும். ஓர்ப்பின்மை—வஸ்துவையறிய வொண்ணுமை. மைத்தும்—தமோ குணமும்.

10. இம்மூன்று குணங்களுங் கலந்திருப்பனவேயா யினும் ஊழ்வினைக்கும் உணவின் வித்யாஸத்துக்குந் தக்கபடி ஒவ்வொரு குணமும் மற்றை யிரண்டு குணங் களையும் அடக்கித் தான் தலையெடுத்து நிற்குமென்பது இச்செய்யுளின் தாத்பர்யம்.

11. பொறிவாயிலெங்கும்—கண்முதலிய ஸகலமா ன ஞானமார்க்கங்களிலும். உயரும்—தலையெடுத்து நிற்கும்.

12. வீணுழற்றி—பயனின்றி யுழைத்தல். சாயாபுல னெழுச்சி—அடங்காதனவையாய் இந்திரியங்கள் எழு தல். ஆசை-விஷயங்களில் ஆசையுண்டாதல்.

13. ஒன்றில் முயல்வறுதல்—ஒன்றிலும் பிரவ்ருத்தி யுண்டாகாமை. மோகம்—விபரீதஞானம். குருமுதல் வா—குருசிரேஷ்டனே.

14. சத்துவமிக் கோக்கந்தரும்பொழுதில்—ஸத்வ குணமானது விருத்தியான காலத்தில். 'சத்தமிக்கு' என்பதனை சத்துவமிக்கு என்று திருத்திக்கொள்க. இருக்கின்றபடியே கொண்டால் சத்து என்பதற்கு ஸத்துவம் என்று பொருள்செய்க. தத்துவத்தின் மேலறிவு சேர்ந்தார்—ஆத்மாவின் உண்மையை நன்ருக அறிந்தவர்கள் கூடியுள்ள.

15. இரசத்துயர்வின் மாய்ந்தவவன்—ரஜோகுணம் தலையெடுத்தபொழுது மரித்தவன். தமத்துயர்வில்—தமோகுணந்தலையெடுத்தபொழுது.

16. நின்மலமாம் நற்பயனை—நிர்மல மானதாய்த் துக்க லேசமும் அற்றதாயிருக்கும் பலனை. பிற்குண மென்றது தமோகுணத்தை.

18. மேலடைவர் முற்குணத்தோர்—ஸத்வகுணத்தி லிருப்பவர்கள் வரவர மேலான பதவியை யடைவார்கள். [அதாவது ஸம்ஸாரத்தினின்று மோக்ஷத்தை யடைகிருர்கள்.] நடுவோ முலகிற்ருனிற்பர்—சுவர்க்க லோகத்திலிருக்கப் பெறுவார்கள். பீடழிவர்—நலங்குலைவார்கள்.

19. குணமவற்றில் வேறுபட்ட கத்தாவை—குணங்களைத்தவிர்த்து வேருகவுள்ள கர்த்தாவை. குணந்தன்

னிற் பரன்—குணங்களுக்குப் பரனுகவிருக்கின்றான். [இயற்கையிலேயே தூயனான ஆத்மா பூர்வகர்மங் காரணமாகவரும் குணஸங்கத்தால் கர்த்தாவாகவிருக்கிறானென்றும், ஆத்மா ஸ்வபாவத்தில் கர்த்தாவல்லனென்றும் எப்பொழுது அறிகிறானே அப்பொழுது அவன் நமக்கு ஸமமாகின்றானென்பது இப்பாட்டின் கருத்து.]

20. இங்குடலம் மேவியமர் இக்குணங்கள் மூன்றினையும்—சரீரமெடுத்திருக்கும் பொழுதே, சரீராகாரமாய் விகாரப்பட்டிருக்கும் பிரகிருதியினின்று முண்டான இந்த ஸத்துவம் முதலிய குணங்கள் மூன்றையும். மன்னினவன்—ஞானமே வடிவான ஆத்மாவைக் கண்டவன். அமுதஞ்சேரும்—அமிருதமான ஆத்மஸ்வரூபத்தை யடைவான்.

21. எங்ஙனே—எவ்வித உபாயத்தால். இத்தை—ஸத்வம் முதலிய இக்குணங்களை.

22. ஒளி—பிரகாசம்; இயற்றி—பிரவ்ருத்தி. முனியான்—(இவை ஸத்துவாதி குணகாரியங்கள் என்று நினைத்து அவைகளைப்) பகைக்கமாட்டான்.

23. உதாசீனன்—விரும்பவாவது, வெறுக்கவாவது செய்யாதவன். சேட்டியான்—சேஷ்டியான்.

24. தன்னமர்ந்து—தன்னுள் தானிருப்பவனாய். பழி—நிந்தை.

25. ஒன்னலர்—சத்துருக்கள். செய்முயற்றி யெல்லாஞ்செய்யான்—தான் சரீரத்தை யெடுத்திருப்பதால் வரும் எந்த வியாபாரங்களையுஞ்செய்யத்தொடங்கான்.

26. குணஞ்செற்று—ஒருவராலும் ஒழிக்கப்போகாத இந்த ஸத்வாதி குணங்களைக்கடந்து. பிர்மமாந்தன்மையினை—பிர்ம்ம பாவத்தை யடையும்படியான நிலைமையை.

27. குன்றா—அவ்யயமாயிருக்கும். ஒருமை சார் சுகம்—ஏகாந்தத்தால்வரும் இன்பம்.

அத்யாயம் 15.

புருஷோத்தமயோகம்.

1. மீதா முதலாய்—மேற்புறத்தில் வேராய். மிகு சாகை கீழாக—மிகுந்தள்ள கிளைகள் கீழ்ப்புறத்திலுள்ளதாக. உலகாம் உயரரசை—ஸம்ஸார மென்கின்ற உயர்ந்த அரசமரத்தை. போதுந்தளிர்கள் மறையாக—

உண்டாகின்ற இலைகள் வேதமாக. [ஏழுலோகங்களுக்கும் மேலாகவிருக்கின்ற நான்முகனை ஆதியாக வுடைமையால், 'மீது முதலாய்' என்றும், பூவுலகில் வாழும் ஸகலமான மனிதர், பசு, மிருகம், பூச்சி, புழு, பக்ஷி, தாவரம் இவைகளை முடிவா யுடைமையால் 'மிகுசாகை கீழாக' என்றுங் கூறியதென்க.]

2. அதுக்கு—அந்த விருக்ஷத்துக்கு. தாழ்வில் குணத்துயருஞ் சார்புலன்கள் சூழ்தளிரா—தாழ்வில்லாத ஸத்வம் முதலிய குணங்களால் மேன்மேலு முயர்கின்ற சப்தம் முதலிய விஷயங்கள் தளிராகக்கொண்டு. [கந்தர்வர், யக்ஷர் என்று மேலும், மனுஷ்யாதி ரூபமாய்க் கீழும் அம்மரத்துக்குப் பலகிளைகள் பரவுகின்றனவென்க.]

3. மூல அரசாமிதனை—நன்றாய் வேரூன்றிய இந்த அரசமரத்தை. அறவாம் வலிச்சத்திரங்கொண்டு—பற்றின்மை யென்னுந் திடமான கத்தியைக்கொண்டு.

5. மானம்—தேகமே ஆத்மாவென்கின்ற அபிமானம். நசை—போகத்தில் பற்று. உயிர்த்தன்மை யமர்ந்து—ஆத்மஞானத்தில் ஊன்றிநின்று. ஆசையகன்று—ஸமஸ்த காமங்களையுமொழித்து. இன்பதுன்பவிருமை விட்டு—இன்பம் துன்பம் என்கின்ற இரண்டையும் விட்டு.

மன்பதம்—பெருமைபெற்ற பதத்தை; என்றது ஆத்ம ஸ்வரூபத்தை.

6. உயிர்ச்சோதியினை—ஜோதிரூபமான ஆத்மஸ்வரூபத்தை. தாமம்—ஜோதி.

7. இவ்வுலகில்—ஜீவலோகத்தில். வலிக்கும்—இழுக்கிறான்.

8. இவற்றை வாங்கியேகும்—பூதஸூக்ஷ்மங்களோடு கூட இவற்றைக் கிரகித்துக்கொண்டு போகிறான். ஈசனவன்—அந்தச் சரீரத்திலுள்ள இந்திரியங்களுக்கெல்லாம் ஈசனாகவிருக்கிறான்.

9. துவக்கு—உடல். சிங்ஙவை—நா. புன்பொருள்களெல்லாம்—சப்தம் முதலிய இழிவான விஷயங்களையெல்லாம்.

10. மன்னிவனை—பொருந்துகின்ற இவ்வாத்மாவை. நாட உணர்வு அழியார்—இந்தவாத்ம வஸ்துவை எந்த நிலையிலும் அறியவல்ல அறிவுகெடாத ஞானிகள். முற்றுணர்வர்—(இது ஞானமே வடிவாயுள்ளதென்றும், தேவத்வ மநுஷ்யத்வாதிகளெல்லாம் சரீரத்தைச்சேர்ந்தவென்றும், இது சரீராதிகளைக் காட்டிலும் வேறாயி

ருப்பதொன்றென்றும்) நன்றாயுணர்வார்கள். மூடரென்றது தேகமே ஆத்மாவென்று பிரமிக்கின்றவர்களை.

11. மன்னு கருமத்து மருவு இயல் யோகியர்கள்—என்னிடத்துப்பொருந்தியபிரபத்தியோடு கர்மயோகம் முதலானவைகளில் யத்னத்தைச் செய்யும் யோகியர்கள். நிறைவின்றி—மனத்தெளிவு இல்லாமல், ஆத்மாவைக்காணும் ஞானம்இல்லாமல். எஞ்சலற—குறைவற.

12. அங்கி—அக்னி. இலகி—விளக்கி. வனப்பு—அழகு.

13. பூதலத்தின் மேவி—பூமியில் ஆவேசித்து. மிடுக்கு—வலிமை.

14. ஒள்ளெரி-வைச்சுவாநரமென்னும் ஜாடராக்னி. கலவா—கலந்து. வாயுவிரண்டு—பிராணம், அபாநம். அறப்புசிப்பன்—நன்றாகப்புஜிக்கின்றேன்.

15. எல்லார் இதயத் திருப்பேன் நான்—(முற்கூறிய சந்திரர் சூரியர் முதலான) எல்லாருடைய ஹிருதயத்திலும் (எல்லாவற்றையும் என் ஸங்கல்பத்தாலே நியமித்துக்கொண்டு) நான் ஆத்மாவாயிருக்கிறேன். [ஸகலமான பிரவ்ருத்தி, நிவிருத்திகளுக்கும் ஏதுவான ஞானமுண்டாவதற்கு ஸ்தானமாகையால் இருதயத்

தைச் சொன்னதென்க] நினைவு—ஸ்மிருதி; அதாவது முன் அனுபவித்த வஸ்துவிஷயமாய் அனுபவ ஜந்யமான ஸம்ஸ்காரத்தினால் மாத்திரம் பிறப்பதொன்று. அறிவு—ஞானம்; அதாவது-இந்திரியம், லிங்கம், ஆகமம், யோகம் இவைகளாலுண்டாகும் வஸ்து நிச்சயம். நாட்டம்—ஊஹம்; அதாவது இந்தப் பிரமாணம் இப்படி பிரவ்ருத்திக்கத் தக்கதென்று பிரமாண பிரவ்ருத்தி யோக்கியதையின் விஷயமாய் ஸாமக்ரீ முதலானவைகளை நிரூபிப்பதினாலுண்டான பிரமாண ஸஹகாரிக் ஞானம். வேத்தியன்-அறியப்படுமவன். ஸூர்யன், வாயு, சந்திரன், இந்திரன் முதலான எல்லார் விஷயமாகவும் சொல்லும் வேதங்களும் அந்த ஸூர்யன் முதலானோர்க்கு அந்தர்யாமியாயிருக்கும் பகவானையே சொல்லுகின்றனவென்று கொள்ளவேண்டு மென்பது பற்றி, "வேதங்கள் யாவைக்கும் வேத்தியன் நான்" என்று கூறப்பட்டதென்க.

16. கரன்—க்ஷரன். அக்கரன்—அக்ஷரன். பூதவுயிரெல்லாங் கரனும்—(ஜீவ சப்தத்தாலே கூறப்படுவனவாய்ப் பிரமன்முதல் புல்லிறுதியாகவிகாரப்படுதலையேயியல்பாகவுள்ள அசித்தோடு கலந்திருக்கின்ற) பிராணி ஸமூகமெல்லாம் கரனென்று சொல்லப்பட்ட புருஷனும்.

17. உத்தமனே யாம் புருஷன் அன்னியன்—உத்தமன் என்கின்ற புருஷனே முன்சொன்ன பத்தர், முக்தர் என்கின்ற க்ஷர அக்ஷர புருஷர்களைக்காட்டிலும், வேறுபட்டவன். பரமன்மா வென்றுரைத்தான்—எல்லாச் சுருதிகளிலும் பரமாத்மாவென்று சொல்லப்படுவான். மூன்றுலகம் தரித்து—(அசேதனம், அத்தோடு கலந்த ஜீவன், அதினின்று விடுபட்ட முக்தன் என்று பிரமாணங்களால் அறியப்படும்) மூன்று லோகத்தையும் (ஆத்மாவாய்ப் பிரவேசித்துத்) தரித்து. குன்றாத—அழியாத.

18. க்ஷரனென்னும் ஜீவனைக் கடந்துபோய் அக்ஷரனென்கின்ற முக்த புருஷனைக்காட்டிலும் உத்தமனாக உயர்ந்திருக்கிறேனாதலால் வேதத்திலும் உலகத்திலும் நான் புருஷோத்தமனென்று பிரஸித்தனாகவிருக்கிறேனென்பது இச்செய்யுளின் பொழிப்பு. உலகு—என்றது இங்கே மந்வாதி ஸ்மிருதிகளை.

20. மறைப்பொருளை—ரஹஸ்யார்த்தத்தை. அனைத்துஞ்செய்வதனும்—கிருதகிருத்தியனுமாவான். நெறியா—நெறியாக.

அத்யாயம் 16.

தெய்வாஸுர ஸம்பத் விபாகயோகம்.

1. அஞ்சாமை—(இஷ்டந்தவிர்ந்து அனிஷ்டங்கைப் படுவதென்கிற துக்கத்துக்கு ஹேதுவான) பயங்கொள்ளாமலிருக்கை. நெஞ்சு தெளிவு—மனத்தெளிவு; அதாவது, அந்தக்கரணம் ரஜஸ்ஸு தமஸ்ஸுக்களோடு கலவாமலிருக்கை. வாய்ந்தறிவாம் யோகநிலை—பிரகிருதிக்குப்புறம்பான ஆத்ம வஸ்துவைப் பகுத்தறிவதில் நிஷ்டை. எஞ்சாத தானம்—குறைவில்லாததானம். அதாவது, நியாயமாய் ஸம்பாதித்த தனத்தை யோக்கியர்களுக் களிக்கை. தமம்—மனத்தை விஷயங்களினின்றுந் திரும்பும்படி பழக்குகை. எச்சம்—யக்ஞம்.

2. மெய்ம்மையாவது தான் கண்டது கண்டபடியே பூதங்களுக்கு இதமாகப் பேசுகை. குறளைச்சொல்லாமை—பிறர்க்கு அநர்த்தத்தைத்தரும் வார்த்தையை ஒருவருக்குச் சொல்லாமை. நாண்—செய்யாததைச் செய்ததில் வெட்கம். பாவுபொருட் சாபலந்தீர் பண்பு—(ஆசைப்படும்படியான) நெருங்கியுள்ள பொருள்களைக் கண்டு சபலப்படாத தன்மை.

3. தேசு—ஒளி. அதாவது துர்ஜனர்களால் திரஸ்கரிக்கப்படாமை. திண்மை—உறுதி. அதாவது மஹாத்

தான ஆபத்திலும் செய்யவேண்டியதைச் செய்தே தீர வேண்டுமென்கிற உறுதி.

4. தன்மமிலா டம்பம்—தர்மமில்லாத வீண் டம்பம்; அதாவது தார்மிகனென்று தன்னைச் சொல்ல வேண்டுமெனக்கருதி யதற்காகத் தர்மத்தை யனுஷ்டிப்பது. தர்மத்தை நோக்கிச் செய்யப்படாமல் கேவலம் டம்பமே பிரதானமாகக் கருதிச் செய்யப்படுவதாகலால் அத்தர்மத்தைத் 'தன்மமிலா டம்பம்' என்று கூறினாரென்க. செருக்கு—விஷயங்களை யனுபவிப்பதால் (கிருத்தியா கிருத்தியங்களில் அவிவேகத்தையுண்டாக்கும்) ஸந்தோஷம். துன்மானம்—(தன்னுடைய வித்தை நற்குடிப்பிறப்பு இவைகளுக்குத்) தகாத அபிமானம். செற்றம்—கோபம். நன்மை யறியாமை—பாபாவாதத்துவங்களென்ன, கிருத்தியா கிருத்தியங்களென்ன இவைகளை அறியாமை. ஆசுரமாம் செல்வஞ் செறிவாருக்கு—அசுரச் செல்வத்தைப் பொருந்துமவருக்கு. [இங்கே அசுரர்களென்றது பகவான் ஆக்ஞையைக் கடந்து செல்பவர்களை யென்க.]

5. தெய்வச்செல்வம் மோக்ஷத்து நாடு உறப்பாம். ஆசுரம் நைவகைசேர் பந்தத்து நாடு உறப்பாம். பார்த்தா! நீ சோகியாதே. ஏனெனில் நீ தெய்வஸம்பத்தைப் பெற்றுப் பிறந்திருக்கின்றாயென்க.

6. பூதம்—இந்தக் கர்மபூமியில் கர்மஞ்செய்யும் பிராணிகளின் சிருஷ்டியானது. இருவகையாய்ப் போரும்—இரண்டு விதமாயிருக்கும். ஆது—அது: சுட்டு நீண்டது. தெய்வம்—தெய்வசிருஷ்டி.

7. சுவர்க்கம், புத்திரன் பசுமுதலிய அப்யுதயத்துக்கு ஸாதனமான வைதிகதர்மம் இல்லறமென்றும், மோக்ஷஸாதனமான வைதிக தர்மம் துறவறமென்றும் அறிக. மெய்குன்றாத் தூய்மை யென்றது—சாஸ்திரத்திற்சொன்ன வைதிக கர்மாநுஷ்டானத்துக்கு வேண்டிய சரீரசுத்தியை. ஆசாரம் என்றது—ஸந்தியாவந்தனமுதலிய ஆசாரத்தை. வாய்மை—ஸத்யம்; அதாவது அறிந்தபடி பூதங்களுக்கு ஹிதமாகப் பேசுவது. அவர் மாட்டு—அந்த அசுரப்பிறவியை யடைந்தவர்களிடத்தில்.

8. இச்சகத்து மெய்யன்று—(ஸத்யமான பிர்ம்மத்தினின்று முண்டாகிப் பிர்ம்ம ஸ்வரூபமாயிருக்கிற) இப்பிரபஞ்சம் ஸத்தியமன்று. இதற்கோர் நிலையில்லை—(பிர்ம்மமென்கிற ஆதிசேஷனால் தரிக்கப்படுகின்ற) இதற்கு ஒரு ஆதாரமுமில்லை. இதற்கோர் இறை இல்—(ஸத்திய ஸங்கல்பனாய் ஸர்வேசுவரனாயிருக்கின்ற என்னாலாளப்படுகின்ற) இதற்கு ஈசுவரனேயில்லை. என்று பிச்சுரைப்பார்—என்று அறியாமற் பிதற்றுவார்கள்.

9. தன்னறியாது—ஆத்மாவைக்காணமாட்டாமல். தீம்பால்—ஹிம்ஸையால். அடுந்தொழிலராவர்—வதைக்குஞ் செய்கையை யுடையவராவார்.

10. கிட்டாத காமத்தை யுன்னி—எட்டாத விஷயங்களிலெல்லாம் ஆசைகொண்டு. அறிவின்றிப் பாவத்தால் இட்டபொருள் வாங்கி—அறிவில்லாமல் பாவத்தால் அந்நியாய ஆர்ஜிதமான பொருளைப் பெற்று. அல்விரதம் சேர்ந்து—சாஸ்திரத்திற் சொல்லப்படாத விரதங்களையெல்லாம் ஏறிட்டுக்கொண்டு. உழல்வர்—வீணுக்கு அலைவார்கள்.

11. காமபோகம் பரமாக்கண்டு—காம போகமே பெரும்பேறாக நினைத்து. ஏமம் இதுவல்லது இலையென்று அறுதி மேவுவர்—புருஷார்த்தம் இதுவன்றி வேறொன்றும் இல்லையென்று தீர்மானங்கொண்டு விடுவார்கள்.

12. காமஞ்சேர் ஆக்கை சதங்களாற் கட்டுண்டு—ஆசையென்கின்ற பாசங்கள் பலவற்றால் கட்டுப்பட்டு. கைவளர்ந்து—அதிகரித்து. அநியாய அத்தத்தை—அக்கிரமமான திரவியத்தை.

14. இறைவன் நான்—நான் ஈசுவரன். போகி—ஸுகி. சித்தன்—ஸ்வதஸ்ஸித்தமாயிருப்பவன். எவன்—எவன்.

15. யெசிப்பேன்—யாகஞ்செய்வேன். கொடுப்பேன்—தானஞ்செய்வேன். நனி யுகப்பேன்—அதனால் மிகவும் ஸந்தோஷிப்பேன். மோகஞ்சார்ந்தவர்கள்—அக்ஞானங்கொண்டவர்கள். நாமூறுநெஞ்சு ஓடி—அனேக விதமான மனக்கவலை கொண்டவர்களாய். கொலைந்து—மரித்து.

16. தம்மைத்தாம் சம்மதிப்பார்—தங்களைத்தாங்களே புகழ்ந்துகொள்வார்கள். தாம் முயலார்—கல்வி, செல்வம், குடிப்பிறப்பு இவைகளால் தங்களைக் குறைவற்றவர்களாக நினைத்துக்கொண்டு யாதொரு வியாபாரமுஞ் செய்யமாட்டார்கள். சேமவிதி சேராதுயசிப்பர்—சாஸ்திரத்திற் சொன்ன நல்ல விதியையனுஷ்டிக்காமல் வேறுவிதமாக யாகஞ்செய்வார்கள்.

17. ஆங்காரம்-(ஒருவருடைய அபேக்ஷையில்லாமல் நானே ஸர்வமும் செய்கிறேன் என்று) அகங்காரமும், வன்மை—(நானே எதையுஞ் செய்யவல்லேன் என்று) வலிமையும், செருக்கு—(இப்படியெல்லாமிருக்கிற எனக்குச் சமமாய் ஒருவனுமில்லையென்று) கொழுப்பும், காமம்—(எனக்கு எல்லாங்கிடைக்குமென்று) விருப்பும், தீங்கார் குரோதம்—(எனக்கு யாராகிலும் தீங்கு நினைத்தால் அவர்களை அதஞ்செய்வேனென்று) தீமை

தங்கிய கோபமும், சேர்ந்த அவர்—சேர்ந்த அவர்கள். தம் பிறர்கள் தேகத்துச் சார்ந்தவெளை—தம்முடைய தேகத்திலும், பிறருடைய தேகத்திலுமிருந்துகொண்டு ஸகலமும்செய்விக்கின்ற ஈசுவரனை என்னை. அருமையச் சுடரால்—அழுக்காறென்னுந் தீயினுல். வெறுப்பார்—பகைப்பார்கள்.

18. உழலும் இப்பவத்தில்—(பிறப்பு, இறப்பு, என்று) மாறி மாறிப்புரண்டுவருகின்ற ஸம்ஸாரத்தில். ஆசுரமாம் யோனியவை தன்னிடையே என்றும் எய்தத் தள்ளுவேன்—அசுர யோனிகளில் தானே எப்போதும் பிறக்கும்படி தள்ளிவிடுவேன். [அந்தந்தப் பிறப்புக் கிடைக்கும்படியான காரியத்தைச் செய்யும்படி அவர்களுக்கு நானே புத்தியைத் தருவேன் என்றபடி.]

20. காமங், குரோதம், லோபம் என்னும் இம்மூன்றும் அசுரஸ்வபாவமென்னும் பெரியநரகத்துக்குவாசல்களாகப் பொருந்தியிருக்கின்றன. இவைகள் ஆத்மாவுக்கு ஈனமான நாசத்தைச் செய்பவைகள். ஆதலால் அர்ச்சுனு! நீ இவற்றுல்வரும் அனர்த்தத்தை அதிவிரைவில் கடிந்து விலக்கு என்பது இச்செயுளின் கருத்து.

21. தன் நன்மை யாசரிக்கத் தன்மைப்பரகதியாம் இந்நன்மை சேரும்—ஆத்மாவுக்கு நன்மையைச்செய்ய

அதனால் தன் தன்மையான பரகதியென்கிற இந்த நன்மையையும் அடைவான். [என்றால். என்னையறிந்து எனக்கனுகூலமான யத்தனங்களைச் செய்து பிறகு என்னையே பரகதியாக அடைவானென்பதாம்.]

22. இட்டம்—இஷ்டம். சேரான் சுகம்—இகத்தில் யாதொரு சுகத்தையும் அடையமாட்டான். சாஸ்திர விதியை விட்டுத் தன்னிஷ்டமான வழியில் நடப்பவன் ஒருவித ஸித்தியையும் அடையமாட்டான். இம்மையில் அவனுக்கு ஸுகமும் கிடையாது. மறுமையில் பரகதியாகிற மோக்ஷமும் அவனுக்கு இல்லை, என்பது இச் செய்யுளின் தாத்பர்யம்.

23. மன்னிச் செயுமதுவும்—கைக்கொண்டு செய்யத்தக்கதும். மற்றதவும்—செய்யத்தகாததும். அறிவு தன்னில்—அறிகிற விஷயத்தில். விதானம்—விதிக்கப் படுவது. இயல்—செய்.

அத்யாயம் 17.

சிரத்தாத்ரய விபாக யோகம்.

1. ஒவா—நீங்காத. இருப்பேது—நிஷ்டையென்ன? [சாஸ்திர முறைதவறிச் சிரத்தையோடு யாகஞ்செய்ப

வர்களின் ஸ்திதியென்ன, ஸத்துவத்திலா, ரஜஸ்ஸிலா. தமஸ்ஸிலா? என்றபடி.]

2. ஐயன்—கண்ணன். மெய்யமருந் தன்மையால்—சரீரத்தினது தன்மையினுல். [தன்மையாவது பழைய வாஸனையின்படி அந்தந்த வஸ்துக்களிலுண்டாகும் ருசி. எதில் ருசி பிறக்கின்றதோ அதன்பால் சிரத்தையுமுண்டாகின்றது. இது என் இஷ்டத்தைக் கைகூடச் செய்யும் என்றநம்பிக்கையால் ஸாதனத்திலுண்டாகுந்த்வரை சிரத்தையெனப்படும். வாஸனை, ருசி, சிரத்தை ஆகிய இம்மூன்றும் குணங்களின் ஸம்பந்தத்தாலுண்டாகும் ஆத்ம தர்மங்களாம் என்று அறிக.]

3. நெஞ்சுக்கு அனுகுணமாய்—உள்ளத்துக்குத் தக்கபடி. [அந்தக்கரணம் எவ்விதமான குணத்தோடு சேர்ந்திருக்கின்றதோ அந்தந்தக் குணவிஷயமாகவே சிரத்தையுமுண்டாகுமென்பதாம்.] சிரத்தையுருவாம் புருஷன்—புருஷன் சிரத்தையின் விகாரமாக விருக்கின்றான்.

4. சத்துவத்தர் அமரர் சார்வு—சத்துவகுணம் விஞ்சியிருப்பவர்கள் தேவர்களை யாராதிப்பார்கள். மத்தியத்தர்—இடைக்குணத்தவரான ராஜஸர்கள். புன்மைத் தமோ குணத்தர் பூதம் பிரேதகணந்தன்னைச் சமைந்த

அணைவர்—அற்பமான தாமஸகுணத்தை யுடையவர்கள் பூதகணங்களையும் பிரேதகணங்களையும் விரும்பி ஆராதிப்பார்கள்.

5, 6. டம்பம், அஹங்காரம், காமம், ராகம் என்பவற்றோடு கூடி சாஸ்திரத்தில் சொல்லாத தவம் முதலியவற்றைக் கோரமாய்த் தீங்காகுந் திண்மை செறிந்து செய்யத்தொடங்கி, அதனால் சரீரத்திலுள்ள பிருதிவி முதலிய பூதஸமூகத்தையும் வருத்திநின்று, அச்சரீரத்தினுள் ஜீவனைப்பொருந்தியிருக்கின்ற என்னையும் பற்றின்றி மிகவும் யார் வருத்துகின்றார்களோ அவர்கள் அசுர நிச்சயமுள்ள பாபிஷ்டர்கள் என்று நீ அறிவாய் என்பது இவ்விரண்டு செய்யுட்களின் தாத்பர்யம்.

7. ஊண்—உணவு. எச்சம்—யாகம். எய்ந்த தவம்—பொருந்திய தவம். உகப்பாம்—பிரீதியாம். ஆஹாரம். யாகம், தவம், தானம் இவைகளுக்கு ஸத்வமுதலிய குணங்களின் சேர்க்கைக்குத்தக்கபடி யுண்டாகும் பேதத்தைச் சொல்லுகிறேன். கேள் என்பது கருத்தாகக் கொள்க.

8. வாணாள்—வாழ்நாளையும், அதாவது ஆயுஸ்ஸையும், மனந்தெளிவு—மனத்தின் நைர்மல்யத்தையும் அதாவது ஞானத்தையும், வலி—பலத்தையும், நோயா

மை—ஆரோக்யத்தையும், சுகம்—ஸுகத்தையும், உகப்பை—பகவத் பிரீதியையும், பொலிவித்து—விருத்தி செய்து. மனோகரமாய்—மனத்திற்கினியதாய்.

9. காழ்த்து—காரமுள்ளதாகி. கைக்கொதித்து—அதிக உஷ்ணப்பட்டு. கடிதாய்—தீக்ஷ்ணமாய். அழல் விளைத்து—தாபத்தையுண்டுபண்ணி. சூழ்க்கும்—விருத்திபண்ணும்.

10. காலங்கழிந்து—நாட்பட்டு. இரதங்கழிந்து—ரஸமெல்லாங் கெட்டுப்போய். துற்கெந்தித்து—கெட்ட நாற்றமுடையதாகி. எச்சிலாய்—பெரியவர்களைத் தவிர மற்றவர்களால் பூஜிக்கப்பட்டுச் சேஷமானதாய். அமுதுக்காகாத—போஜனத்துக்கு அர்கமில்லாத.

11. அதில் பயனை வேண்டாது—அதிற் பலனை யபேக்ஷியாமல். வேத விதி மேவி—வேதத்திற் சொன்ன விதியை யனுஷ்டித்து. முதற்குணத்தில்—ஸத்வ குணத்தில்.

12. பயன் நினைந்து—பலனை யபேக்ஷித்து. பரதர் தலைவா—பரதகுல சிரேஷ்டனே, அர்ச்சுனனே. இடைக்குணத்தது—ராஜஸயாகம்.

13. விதியற்று—நல்லொழுக்கமுடைய வித்வான்களான பிராமணோத்தமர்களால் விதிக்கப்படாமல், அவியற்று—அன்னதானம் முதலியவை செய்யப்படாமல், மந்திரம்விட்டு—மந்திர லோபமாய். தக்கணை—தக்ஷிணை. கோலும்—செய்யப்படுவதாகும்.

14. காயம்—சரீரம். சொலவு—சொல்; செலவு என்பது போன்ற தொழிற்பெயர்.

15. மிகவுணர்ந்தோர்—பண்டிதர்கள். மெய்மை—சரீரசுத்தி, அதாவது தீர்த்த ஸ்நாநமுதலியவைகளைச் செய்தல். காயத் தவம்—சரீரத் தவமாம்.

16. அஞ்சாவகை—பிறர் அஞ்சாத விதமாய், அதாவது பிறருக்கு மனவருத்த முண்டாகாத விதமாய். மெய்—உண்மை. உகப்பு—பிரியம். இதம்—ஹிதம். எஞ்சாத—குறையாத.

17. மனந்தெளிதல்—மனம் தெளிவடைதல், அதாவது சின முதலியவை யற்றிருக்கை. நன்கறிதல்—பிறருக்கு க்ஷேமமுண்டாவதை யறிந்து அதைச்செய்வதில் ஆசை கொண்டிருக்கை. வாயுரையை மீட்டல்—வாக்கைப் பேசவொட்டாமல் அடக்குகை. நினைவு மனஞ்சோ நிறுத்தல்—மனோவியாபாரத்தைத் தியானிக்கப்

படும் விஷயத்தில் தானே நிறுத்துகை. இனமியல்வு சேராத தூய்மை—ஆத்மாவை யொழிந்த இதர விஷயங்களில் சிந்தை போதலில்லாத தூய்மையையுடைமை. சித்தத்துச் சேர்தவமென்று—மனத்தைப்பற்றிய தவமென்பதாக.

18. ஆர்வம் உயர்ந்து—பகவானுக்கு ஆராதனமென்பதாக அன்பு மேலிட்டு. பயனை யுள்ளொழித்து—பலத்தில் மனமின்றி. உய்யுமவர்—உஜ்ஜீவிக்கவல்ல பெரியோர்கள்.

19. நலம் நினைந்து—பலத்தை யபேக்ஷித்து. கொண்டாடி நன்கு இறைஞ்ச—தன்னைக்கண்டு பிறர் ஸந்தோஷித்துக்கொண்டாடி நன்றாக நமஸ்காராதிகள் செய்யவேண்டுமென்று. நில்லாது—சாசுவதமாயிராது. சலித்து மாய்ந்து அறும்—சலிப்புற்று அழிந்து ஒழியும். பீடறவே யெய்ந்த தவம் என்றார், ஸ்வர்க்காதிகளை யிச்சித்துச் செய்யும் தவம் என்றற்கு.

20. பீடை—துன்பம். பிறர்கேடுகூட—பிறர்க்குந் துன்பம் உண்டாக. கடைக்குணம்—தாமஸகுணம்.

21. வரும்பாது என்பதனை விரும்பாது என்றுதிருத்திக்கொள்க. இடம் காலம் நலங்கொள்பவனைத்

தேறி—தகுந்த இடைத்தையும், தகுந்த காலத்தையும், தகுந்த பாத்திரத்தையும் நன்கு தெரிந்து.

22. மீண்டு உபகாரங்கொளவும்—பிரதிபிரயோஜனத்தைப் பெறுவதற்காகவும். புன்பொருள்கள்—கெட்ட திரவியத்தை; அதாவது அநியாய ஆர்ஜிதமான பொருள்களை. இடைக்குணம்—ராஜஸகுணம்.

23. ஆசின்மை பாராது—குற்றமின்மையைப் பாராமல், அதாவது கால்கழுவுதல் முதலிய உபசாரத்தைக் கவனியாமல். அவமதித்து—அவமரியாதை செய்து. மீதரிப்பது—அதிகமாகப் பொருந்துவது. பிற்குணம்—தாமஸகுணம்.

25. ஆதலால் பிராமணர்களுக்கு, ஓமென்றுரைத்தே யாகம், தானம், தவம் முதலியவைகளெல்லாம் வேதஞ்சொல்லும் விதியின் பிரகாரம் நடக்கும் என்க.

26. முத்தி நினைந்து—மோக்ஷத்தை யபேக்ஷித்து. 'மெத்தென்றுரைக்குந்தாம்' என்பதனை 'தத்தென்றுரைக்குந்தாம்' எனத்திருத்திக்கொள்க. யாம் கண்ட இரண்டுபிரதிகளிலும் 'மெத்தென்றுரைக்குந்தாம்' என்றே காணப்பட்டமையால் மூலபாடத்தைமாற்றவில்லை. எனினும், பொருள் இனிது காணப்படாமையோடு

மோனை நயமுஞ் சிதைதலால் யாம்கொண்டபடி 'தத்தென்றுரைக்குந்தாம்' என்று கொள்ளுதல் நலமாம்.

27. உண்மையிலும்—இருக்குந்தன்மையிலும். ஒண்மையிலும்—ஸாதுத்தன்மையிலும். மால்—இந்திரன். விஷ்ணு என்றுரைத்தல் சிறவாது.

29. விருப்பமின்றி—சிரத்தையில்லாமல். ஓமம்—ஹோமம். தான்சத்தாய் என்பதனைத் தானசத்தாயென்று திருத்திக்கொள்க. வானேற வழியாகா—மோக்ஷத்தையடைய வழியாகமாட்டா. காயத்தின் நன்காகா—ஸம்ஸாரத்திலும் நன்மையாகமாட்டா.

அத்யாயம் 18.

மோக்ஷோபதேச யோகம்.

1. சன்யாசம்—ஸந்யாஸ சப்தத்திலும். தியாகத்தில்—தியாகமென்கின்ற சப்தத்திலும். பிறிவு—பிரிவு, அதாவது வேறுபாட்டையும். "பிறியார் பிறிவேதென்னும் பெரியோய் தகவோ வென்னும்" என்னும் இக்கல்வியிற் பெரியார் வாக்கிலும் பிறிவு என்றசொல்பிரயோகிக்கப்பட்டிருத்தலை யறிக. ஒருமை—ஐக்கியம்.

2. காமக்கருமங்கள் கைவிடுதல்—காமியகருமங்களை அறவே கைவிட்டு விடுதலை. எக்கருமப்பேறும் இகழ்வு—நித்தியம், நைமித்திகம் என்கிற எல்லாக் கர்மங்களினுடைய பலனையும் யபேக்ஷியாது விடுதலை. தியாகமெனச்சொல்வர்—தியாகமென்று சொல்லுவார்கள். [இங்கே சாஸ்திரோக்தமான த்யாகம், காம்யகர்மங்களைச் சுத்தமாய்க் கைவிடுகையென்றும், ஸர்வ கர்மங்களிலும் பலாபேக்ஷையற்றிருக்கையென்றும் விவாதத்தைக்காட்டத் தொடங்கினவர், ஓரிடத்தில் ஸந்நியாஸ சப்தத்தையும் மற்றோரிடத்தில் த்யாக சப்தத்தையும் பிரயோகித்தார். இதனுல் த்யாக ஸந்யாஸ சப்தங்களுக்குப் பொருள் ஒன்றேயென்று அங்கீகரிக்கப்பட்டதாகத்தெரிகிறது.]

3. எதம்போல் கன்மம் இகழப்படும் என்றுபோதர் சிலருரைப்பர்—கபிலமதஸ்தர்களும், அந்த மதத்தையனுஸரித்த சில வைதிகர்களும் யக்ஞம் முதலிய கர்மங்கள் ராகம் முதலிய தோஷங்களைப்போல் பந்தஹேதுவாகையால் மோக்ஷார்த்தியானவனுல் கைவிடப்படுமென்று சொல்வார்கள். எச்சந் தவந் தானம் ஈங்கு இகழ்வது அல்லதெனு—யக்ஞந் தவந் தானம் கைவிடத்தக்கதன்றென்று.

4. அறுதி—நிச்சயம். [தியாகம் மூன்றுவகைப்படும்; பலத்யாகம், கர்மத்யாகம், கர்த்தாத்யாகம் என. கர்மத்

தால்வரும் சுவர்க்கம் முதலிய பலம் எனக்குவேண்டா மென்பது பலத்யாகம்; என்பயனுக்காக இந்தக்கர்மம் என்னால்செய்யப்பட்டது என்கிற அபிமானத்தை யொழிக்கை கர்மத்யாகம்; ஸர்வேசுவரனே கர்த்தா வென்பதைத்தெரிந்து தான் கர்த்தாவல்லனென்று மதிக்கை கர்த்தாத்யாகம்.]

5. அவை—அந்த யக்ஞம் தவம் தானமுதலிய வர்ணாசிரமத்தைச் சேர்ந்த கர்மங்களெல்லாம். அறிவினர்க்கும் பாவனமாம்—மனனசீலர்களான ஞானிகட்கும் பரிசுத்த கரங்களாம். [என்றால். வாழ்நாளுள்ளவரைக்கும் உபாஸனஞ்செய்கின்ற மோக்ஷார்த்திகளுக்கு உபாஸனத்தைக் கைபுகுதவொட்டாமல் விரோதிக்கின்ற பழையகர்மங்களைப் போக்குமவைகளென்பது கருத்து.]

6. இக்கருமமான இவை என் கருமமெனா மிக்கு அமரும் சங்கம் மிகுபயன்கள் ஒக்க விடுத்து—(இப்படி உபாஸகர்களுக்குப் பரிசுத்திகரங்களாகையால் உபாஸனம்போல) இந்த யக்ஞயாகாதி கர்மங்களான இவைகள் என் ஆராதன கர்மங்களென்று நினைத்து அக்கர்மங்களினிடத்திற் பொருந்திய மிகுந்த பற்றையும் பலன்களையும் ஒருங்கே விடுத்து. ஆய்ந்த அறுதி—நிச்சயமான தீர்மானம்.

7. நியதமாம் இந்தக் கருமங்கள்—நித்திய நைமித்திகங்களான மஹாயக்ஞாதிகள். விடவொண்ணாது—விடக்கூடாது. இவற்றை—ஞானத்தை விருத்திபண்ணித்தருகின்ற இக்கர்மங்களை. மோகத்தால் தான் விடுதல்—(இவை கட்டுப்படுத்துமவைகளென்று) அக்ஞானத்தால் விட்டுவிடுவது. [அக்ஞானம் தமஸின் காரியமாகையால் தமோகுணத்தால் வருவது என்றூரென்க.] அக்ஞானமாவது—ஞானத்துக்கு விரோதியான விபரீதஞானம். [சரீரத்தை யக்ஞ சேஷத்தால் வளர்த்து வந்தால் அது நல்ல ஞானத்தையுண்டாக்கும். அப்படி யக்ஞ சேஷமல்லாதவைகளாலே சரீரத்தை வளர்த்தால் அது விபரீத ஞானத்தை யுண்டுபண்ணும்: பிர்ம்ம ஸாக்ஷாத்காரரூபமான ஞானம் ஆஹார சுத்தியைப்பொருத்தது. ஆகையால் மஹாயக்ஞம் முதலிய நித்ய நைமித்திககர்மம் பிரயாணமளவும் பிரம்ம ஞானத்துக்காக வேண்டியிருக்கிறபடியால் விடலாகாது என்றூரென்க.]

8. துக்கமெனு—(கர்மமானது பரம்பரையாக மோக்ஷத்தை ஸாதிக்குமாயினும்) துக்கரூபமான திரவிய ஸம்பாதனத்தாலே ஸாதிக்கவேண்டியதாயிருக்கின்றதென்று, கன்மத்தை—மஹாயக்ஞந் தொடக்கமான ஆச்சிரம கர்மத்தை. உடல்வருத்தம்—காயகிலேசத்தா

லும், மிக்க பயத்தால்—(மனத்திற்கு வருத்தத்தையுண்டு பண்ணுமென்று) பயத்தாலும், செய்யாவிட்டவன்—செய்யாமல் விட்டவன். வாய்ந்த இடைக்குணத்தான்—ரஜோ குணத்தால் வந்த யாகத்தைச் செய்தவனாகின்றான். அப்பயனும் எய்த அறிவுபெறான்—அத்தியாகத்தின் பயனாகப்பொருந்திய ஞானோத்பத்தியையடையமாட்டான்.

9. நியதக் கருமத்தை—நித்திய நைமித்திகமான வர்ணாசிரம கர்மங்களை. நேர்ந்து—எம்பெருமானுடைய ஆராதன ரூபமென்று அறிந்து. இயல்வென்று—அவற்றைச்செய்வதே பயனென்று கருதி. சங்கம்—எனது என்கின்ற பற்றையும். பயன்—கர்மப்பயனையும். துறப்பார் தியாகம்—கைவிடுவாரது தியாகமானது. முற்குணத்ததாம்—ஸாத்விகமானதாம்.

10. தீவினையில் நல்வினையில் வெறுப்பு சங்கமவை ஒவி இருப்பு எய்தும்—தீயகருமத்தில் வெறுப்பும் நல்வினையில் பற்றுமாகிய இவற்றை விட்டு இருப்பான். [தீவினையென்றது இங்கே அனிஷ்டபலத்தைத் தருங்கர்மத்தை. நல்வினை யென்றது சுவர்க்கம், புத்திரன், பசு, அன்னம் முதலிய பலத்தைத் தருங்கர்மத்தை. எந்தக்கருமத்திலும் எனது என்கின்ற அபிமானமில்லாமையாலும்,பிரம்மத்தை யொழிந்த ஏனைய பலன்களைக்

கைவிட்டமையாலும், நான் செய்தேன் என்கின்ற கர்த்திருத்வத்தை விட்டமையாலும் அவைகளைச் செய்யுமிடத்தில் விருப்பு வெறுப்புக்களிரண்டுஞ் செய்யமாட்டானென்க. இங்கே அனிஷ்டபலத்தைத் தரும் கர்மமாவது, தன்னாலும் அறியப்படாமல் செய்யப்பட்ட பாபகர்மமாம்.]

11. நன்றாம்படி துறந்தோனென்று—சாஸ்திரங்களிற் சொன்னபடி நன்கு துறந்த தியாகியென்று. [தேகத்தைத் தரிப்பதற்காகப் புசித்தல், பானஞ்செய்தல், முதலிய கர்மங்களும் மற்றும் அதைச்சேர்ந்த கர்மங்களும் ஒழிக்கப்போகாமையால் அதற்காக மகாயக்ஞம் முதலிய அனுஷ்டானமும் ஒழிக்கப்போகாது என்பது பற்றிக், 'கருமமெலாங் கைவிடுதலரிதாகும்' என்றாரென்க.]

12. நன்றும்—சுவர்க்காதிகளான நற்பலம் என்றும். தீதும்—நரகாதிகளான அனிஷ்டபலம் என்றும். கலந்து நண்ணும் பலம்—புத்திரன், பசு என்கிற இப்படிப்பட்ட நன்றுந் தீதுங்கலந்த பலமென்றும், பலமூன்றாய்—பலன்கள் மூன்று விதமாய், துறவாது உடன்சென்றார்க்கு—கர்த்திருத்வத்தையும், எனதென்கிறஅபிமானத்தையும், கருமப்பயனையும் கைவிடாமற்செல்பவர்கட்கு. கருமத்தில் ஒன்றில்—கருமானுஷ்டானத்தில் பொருந்

திஞல், ஒன்றும்—உடனே பலிக்கின்றது. ஒருமைப் படத் திறந்தார்க்கு—கர்த்திருத்வாதிகளை யொருங்கே கைவிட்டவருக்கு, பயன்சாரா—இப்பயன்கள் உண்டாக மாட்டா. 'பலமூன்ருப் பொன்றும்' என்றிருப்பதனை பலமூன்ரு—யொன்றும் எனத்திருத்திக்கொள்க. இங்ஙனம் கொள்ளாவிடின் நன்கு பொருள்படாமையோடு மோனையுமில்லாது போமெனக் க.

13. ஆரணம்—வேதம். அறிதி—அறிவாயாக. ஐவகை சேர் காரணங்கள்—ஐந்துவகைப்பட்ட காரணங்கள்.

14. உடல்—(மகா பூதங்களின் தொகையான) சரீரம். உயிராங் கர்த்தா—கர்த்தாவென்கிற ஜீவாத்மா. கரணம்—வாக்குமுதலிய ஆறுகரணங்கள். ஒற்கமிலா—அடக்கமில்லாத. சேட்டைபல—நாஞவித சேஷ்டைகளையுடைய, பஞ்சமம்—(பிராணம், அபாநம், வியாநம், உதாநம், ஸமாநம் என்று) ஐந்து வாயுக்கள். தெய்வ இறை—அந்தர்யாமியான பரமாத்மா.

15. காயத்தால், வாக்கால், மனந்தன்ஞல்—காயம் வாக்கு, மனம் என்கின்ற முக்கரணங்களாலும். நல்வினைக்கும் தீவினைக்கும்—சாஸ்திரத்தில் விதித்தமானதும் நிஷித்தமானதுமான எல்லா நல்வினை தீவினைகளுக்கும். இவை ஐந்தும்—சரீரம், ஜீவாத்மா, கரணம்,

வாயு, பரமாத்மா வென்னும் இவையைந்தும், ஏதுவா ம்—காரணமாம். [என்றால்—சரீராதிகரண ஸகிதனைக் கொண்டு பரமாத்மா கர்த்தாவாகின்றானென்று தாத்பர்யம்.]

16. ஈசனால்—பரமாத்மாவின் அனுமதியினால். வெறுஞ்சீவனை—(பரமாத்மாவை முன்னிட்டுக்கொண்டல்லது) ஒன்றுஞ்செய்ய சக்தியற்ற ஜீவாத்மாவை. துன்மதி—துர்ப்புத்தி.

18. அறிவு—செய்யவேண்டுங் கர்மத்தையறியும் ஞானம். அறியப்படுங்கன்மம்—செய்யவேண்டுவதாக அறியப்படுங்கர்மம். அறிவான்—அதையறியுமவன். விதிமூன்றாகும்—என்று கர்ம விதியானது மூன்று வகைப்பட்டதாகும். [என்றால், அறிவு, அறியப்படுமது, அறியுமது என்று இம்மூன்றுடன் கூடியது ஜோதிஷ்டோமம் முதலிய கர்மங்களின் விதியென்பதாம்.]

19. காண் உணர்வும்—செய்யவேண்டுங் கர்மத்தையறியும் ஞானமும், கர்மமும்—செய்யப்படுங்கர்மமும், கர்த்தாவும்—அதை யனுஷ்டிப்பவனும் ஆக இம்மூன்றும். மும்மூன்றாய்ப் பேணுங்குணத்திற்பிரியும்—ஒவ்வொன்றும் மூன்று விதமாய் ஸத்வாதிகுணங்களுக்குத் தக்கபடி பிரிவுடையதாகும்.

20. வண்ணச்சிரமம்—இனவெதுகை. வண்ணச்சிரமமென்றும்பாடம். சேறறிவு—ஸாரமான அறிவு, அதாவது உத்தமமான ஞானம். 'சேறுபடுமலர்' எனச்சிந்தாமணியிலும், 'சேதனமென்னுமச் சேறகத் தின்மையாற்—கோதென்று கொள்ளாதாங் கூற்று.' என நாலடியாரிலும் சேறு என்னுஞ்சொல் இப்பொருட்டாய் வருதலையறிக. ஸார க்ஷேத்திரம் சேறையென வழங்கப்படுதலுங் காண்க. 'சேரறிவு' எனக்கொள்ளின் எதுகை நயமில்லையாம். பிராம்மணனென்றும், க்ஷத்திரியனென்றும், பிரம்மசாரியென்றும், கிரஹஸ்தனென்றும் இப்படி நானாவிதமாய்ப் பிரிக்கப்பட்டுக் கர்மாதி காரியங்களாயிருக்கிற ஸகல பூதங்களிலும் ஆத்மாவென்னும் பொருள், பிராம்மணாதி பேதங்களுக்குத் தக்கபடிபிரிக்கப்படாமல், ஞானமே வடிவாயும், அழிவற்றதாயும், பலனைப்பெறுவதற்குத் தகாததாயும் இருக்கிறதென்று எந்த ஞானம் அறிகின்றதோ அது ஸாத்விகஞானமாமென்று தெளிவாயாக, என்பது இச்செய்யுளின் தாத்பர்யம்.

21. உயிரும் வெவ்வேறாய்க் கூடுமென—ஆத்மாக்களும் வெவ்வேறாய்ப் பிரிக்கப்பட்டுப் பலன்களை யனுபவிப்பதற்கு யோக்கியமானவைகளாய்ப் பொருந்துமென்பதாக.

22. ஏதேனும் ஓர் கருமத்து—பிரேதம், பூதம் முதலியவைகளை யாராதிப்பதற்காகச் செய்யும் ஏதாவது ஒரு கருமத்தை. எல்லாம் பெறலாமென்று—ஸகல பலன்களேயும் அடையலாமென்று. ஆதே நசை பண்ணி—அதையே நம்பிக்கொண்டு. மெய்ம்மை யடையா வெறு மறிவு—உண்மையில்லாத அதாவது பொய்யான வெற்றறிவை.

23. உகப்பு வெறுப்பன்றி யுயர்நசையுமற்றே—(தன் வருணச்சிரமங்களுக்குத் தக்கபடி நான்செய்தேனென்ற) அபிமானமில்லாமலும், (பிறருக்குண்டான கீர்த்தியில்) துவேஷமில்லாமலும், (தனக்குக் கீர்த்தியுண்டாக வேண்டுமென்ற) மிக்க ஆசையில்லாமலும். பயனில் ஆசையொழிந்து—பலத்தில் அபேக்ஷையின்றி.

24. காம நசை தன்னல்—பலத்தையடைய வேண்டுமென்ற இச்சையினல். ஆயாசம்—சிரமம். [வெகு கஷ்டமாயிருக்கிற இந்தக்காரியம் என்னல் செய்யப்படுகிறது என்ற அபிமானத்தோடு செய்யப்படும் கர்மம் ராஜஸமென்னப்படுமென்பதாம்.]

25. துக்கத்தொடர்ச்சி—கர்மஞ் செய்யும்பொழுது உண்டாகும் துக்க பரம்பரையையும், பொருள் நாசம்—பொருட்செலவையும், பீடை—பிராணி ஹிம்ஸையை

யும், இயல்வலி—கருமத்தை முடிக்கும்படியான ஸாமர்த்தியத்தையும், ஒன்றினையுந் தக்கறியான்—ஒன்றையுந் தக்கபடி பாராதவன். மோகத்தால்—அஞ்ஞானத்தால், பரமபுருஷன் செய்கிறான் என்ற ஞானமில்லாமல்.

26. ஆர்ந்தபயன் ஆசையதை விட்டு—பொருந்திய பலனிடத்தில் பற்றைவிட்டு, ஆங்காரந் தீர்ந்து—செய்கிறேனென்ற அபிமானமுமில்லாமல். திடனாய் முயற்றி சென்றியன்று—தைரியமுடையவனாய் உத்ஸாஹத்தோடுங்கூடி. தைரியம்—இடுக்கணழியாமை, அதாவது கருமஞ்செய்யத்தொடங்கியது முதல் முடியுமளவும் நேரிடுந் துக்கத்தை யனுபவித்தல். உத்ஸாஹமாவது—பிரயத்தன ஸஹிதமான மனத்துடன் கூடியிருத்தல். சேர்ந்துவரும் பேர் இழவில்—கைகூடிவருவதிலும், பெரிய நஷ்டம் வருவதிலும். [யுத்தமுதலிய கருமத்திலும் அதற்காகச்செய்யும் பொருள்தேடல் முதலிய கருமத்திலும் ஸித்தியுண்டானாலும் உண்டாகாவிட்டாலும்.] பீடுடைய கர்த்தா—பெருமையையுடைய கர்த்தா. இங்கே பீடு என்றது சித்தவிகாரமடையாமையை.

27. புகழ்விரும்பி—கீர்த்தியை யிச்சித்து, புன்பயனை வேண்டி—அற்பமான கர்மபலனை யபேக்ஷித்து, பொருளை வவ்வி—செலவுபண்ணவேண்டிய பொருளைச் செலவிடாமல் இறுகப்பிடித்து, பீடையினை மேவி—

வருத்தத்தையடைந்து. சுத்தியுறுது—ஆசாரமில்லாமல், உட்களிப்பு சோகத்து உறுங்கர்த்தா—யுத்தமுதலிய கர்மங்களாலுண்டாகும் ஸித்தியிலும், அஸித்தியிலும் மனச்சந்தோஷமும் துக்கமுங்கொண்டாடுங் கர்த்தாவானவன்.

28. நன்மைத் தகான்—சாஸ்திரோக்தமான கர்மத்தைச் செய்யத்தகுந்த யோக்கியதையற்றவனாய். அறிவு நண்ணான்—கல்வியறிவு பொருந்தாதவனாய். முயற்றியுறான்—முயற்சியில்லாதவனாய். வன்மைச் சடன் மறத்தில் மன்னுவான்—வலிய சூன்னிய முதலியவற்றைச் செய்யும் விஷயத்தில் இசைவுள்ளவனாய். நெடுகவாதை நினையுங்கர்த்தா—பிறருக்கு நெடுநாளாய் அனர்த்தத்தைத் தேடுங்கர்த்தாவானவன்.

29. புந்தி—பகுத்தறிவு. திண்மை—இடுக்கணழியாமை. குணப்பிரிவால்—ஸத்வம் முதலிய குணவேறுபாட்டால். [புத்தியிலும் தைரியத்திலுமுண்டான மூன்று பேதத்தையும் சொல்லக்கேள் என்பதாம்.]

30. 'துக்க வியலறமும்' என்பதனை அக்க வியலறமும் எனத்திருத்திக்கொள்க. துக்க வியலறம் என்று ஏட்டிலுள்ள பாடம் 'அப்யுதயஸாதன பூததர்மம்' என்ற ஸ்ரீ பாஷ்யத்தின் அபிப்பிராயத்துக்கு விரோதமாத

லோடு செய்யுளின் மோனை யிலக்கணத்துக்குஞ்சேராத தால் கொள்ளத்தக்கதன்று. யாம்கொண்டபாடம் ஸ்ரீபாஷ்யத்துக்கும் செய்யுளிலக்கணத்துக்கும் ஒத்திருத்தல் காண்க. அக்க இயலறமும்–(க்ஷேமத்துக்கு ஸாதகமான) பிரவிருத்தி தர்மத்தையும், அல் அறமும்–(மோக்ஷத்துக்கு ஸாதகமான) நிவ்ருத்தி தர்மத்தையும், ஆன்று அறியும் புந்தி—நன்றாக அறிகின்ற புத்தியானது.

31. தன்மமும்—முன்சொன்ன இருவகைத் தர்மத்தையும். மற்றைய தன்மமும்—அதன் விபரீத தர்மத்தையும்.

32. எல்லாப் பொருளையும் விபரீதமாகக்காணும் புத்தி தாமஸபுத்தி யென்பதாம். [அதாவது தருமத்தை அதர்மமாயும், அதர்மத்தைத் தர்மமாயும், ஸத்தை அஸத்தாயும், அஸத்தை ஸத்தாயும், பரமான தத்துவத்தை அவரமாயும், அவரமான தத்துவத்தைப் பரமாயும் இப்படி யெல்லாவற்றையும் வித்தியாஸமாகவே பார்த்தல்.]

33. நெஞ்சு—மனம். உயிர்—பிராணன். புலன்கள்—இந்திரியங்கள். மோக்ஷோபாயமாக எம்பெருமானை உபாஸிப்பதென்கிற யோகம் என்பார் வண்மையறி யோகம் என்றார். திருதி—தைரியம். திண்மையினால் தரிக்கும்—வலிமையோடு தரிப்பிக்கும்.

37. ஏது—ஏது. முதல் விடம்போல் இன்னாது—(யோகத்தைச் செய்யத் தொடங்கும்பொழுது மிகவும் வருத்தப்பட்டு ஸாதிக்கவேண்டுகையாலும், தனியான ஆத்ம ஸ்வரூபம் முன்னே பழகாமையாலும்) முதலில் விஷம்போல் துக்கந்தருவாய். பின் அமுதம் ஒக்கும்—பிறகு (அப்பியாஸத்தின் வலிமையாலே ஏகாந்தமான ஸ்வரூபத்தை யடைவதால்) அமிர்தத்திற்கு ஸமானமாயிருக்கும்.

38. பொறிபுலனால்—இந்திரியத்தாலும், விஷயத்தாலும். நிரயம்—நரகம்.

39. தோன்றுழியில்—பக்குவமாகும் பொழுதும். துய்ப்பில்—அனுபவிக்கும்பொழுதும். உறக்கம் மடி ஓர்ப்பின்மையால்—நித்திரை, ஆலஸ்யம், பிரமாதம் இவைகளால். பிரமாதமாவது—செய்யவேண்டியதிற் கவனமில்லாமை. மோகச்சுகம்—மோகத்தை விளைவிக்கும் சுகம்.

40. பூமிமிசை மானிடரில்—பூமியில் மனுஷ்யர்களிடத்திலாவது. பொன்னுலகில் இமையோர் தம்மில்—தேவலோகத்தில் தேவர்களிடத்திலாவது, பிரகிருதி முக்குணங்கள்-பிரகிருதியினுடைய முக்குணங்களையும்.

41. தன்மை அமர்குணம்—ஸ்வபாவமாயுண்டான ஸத்வமுதலிய குணங்கள். [பிராம்மணனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, ரஜஸ்ஸையும் தமஸ்ஸையுமடக்கித் தலையெடுத்திருக்கும் ஸத்துவகுணம். க்ஷத்திரியனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, தமஸ்ஸையும் ஸத்துவத்தையுமடக்கித் தலையெடுத்திருக்கும் ரஜோகுணம். வைசியனுக்குஸ்வபாவத்தாலுண்டானது,ஸத்துவத்தையும், ரஜஸ்ஸையுமடக்கிக் கொஞ்சந்தலையெடுத்திருக்கும் தமோகுணம். சூத்திரனுக்கு ஸ்வபாவத்தாலுண்டானது, ரஜஸ்ஸையும் ஸத்துவத்தையுமடக்கி மிகவும் தலையெடுத்திருக்கும் தமோகுணம் என்றறிக.]

42. சமம்—(புறக்கரணங்களை யடக்குவதென்கிற) சமம். தமம்—(அந்தக்கரணங்களை யடக்குவதென்கிற) தமம். தவம்—(போகத்தை யடக்கும்படி சாஸ்திரத்திலேற்பட்ட காயகிலேசமென்னும்)தவம், சுத்தி–(சாஸ்திரோக்தமான கருமத்தைச் செய்யும்படியான யோக்கியதையென்கிற) சௌசம், பொறை—(பிறரால் தான் பீடிக்கப்பட்டாலும் சித்த விகாரமடையாமலிருக்கையாகிற) க்ஷாந்தி, செவ்வை—(பிறர் விஷயத்தில் மனத்தில் நினைத்தபடியே வெளியிலும் நடக்கையென்கிற) ஆர்ஜவம். ஞானம்— (பரதத்துவத்திற்கே யுரியவைகளான விஷயங்களை யறிவதென்கிற) ஞானம். உண்மையுணர்வு—ஆஸ்திக்கியம்.

43. சௌரியமும்—யுத்தத்தில் நிர்பயமாய் பிரவேசிக்கும்படியான ஸாமர்த்தியமும், ஒளியும்—சத்துருக்களால் வெல்லப்போகாமையும், துணிவும்—எடுத்த் காரியத்தைத் தடைநேரிட்டபோதிலுந் தலைக்கட்டுந் திறமையும், சமத்தும்—எந்த வேலையானாலும் செய்யும்படியான ஸாமர்த்தியமும். அமர் நாணமை—யுத்தத்தில் தனக்கு மரணம் நேரிடுமென்ற நிச்சயமுண்டானாலும் புறங்கொடாமை. சீரியனாய் ஒக்க நியமிக்குமது—பெருந்தன்மை யுடையோனாய் ஜனங்களையெல்லாம் ஒருபடியாக ஆளும் ஸாமர்த்தியம்.

44. காணி—பூமி. காலி—பசு. வாணியம்—வர்த்தகம். மூவர்க்குமாளாய்ப்பேணிமுயலுமதே—முற்கூறிய மூவருணத்தார்க்கும் ஆளாயிருந்து விரும்பிப் பணிசெய்தலே.

45. தன்கரும நின்று—தன் தன் கருமத்தில் ஊன்றியிருந்து. சித்திச்சார்வகையை—பரமபதத்தையடையும் விதத்தை. "இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும் .....ஐயுருபே." என்பதனால் 'சித்திச்சார்வகையை' என வலிமிக்கது. சித்திசார்வகையை யெனவும் பாடம்.

46. பரம்பும்—வியாபிக்கப்பட்டிருக்கின்றான். அவனை—அந்தப்பரமாத்மாவான என்னை. [எவன்பாற் பூத

ங்களெல்லாம் பிறந்து பிரவிருத்திக்கின்றனவோ, எவன் இவற்றினிடையெல்லாம் அந்தராத்மாவாய் வியாபித்திருக்கின்றானோ அந்த என்னை யாராதித்து, மனிதன் எனது அனுக்கிரஹத்தால் என்னை யடைவதென்கிற சித்தியைப் பெறுவான் என்பதாம்.]

47. தன் கருமம்—தன் தர்மமான கர்மயோகம். அல்குணத்தைச் சார்ந்திடினும்-குணமற்றதைப் பொருந்தியிருந்தாலும், அதாவது குணமற்றதானாலும். மிக்கியன்ற வன்கருமமான மற்றொன்றின் நன்கதுவாம்—இந்திரிய ஜயம் பண்ணவல்ல புருஷனது தருமமான கஷ்டஸாத்யமான ஞானயோகத்தைக் காட்டிலும் சிறந்ததாம். தன்மைசேர் கன்மத்து—(இந்திரிய வியாபார ரூபமாயிருக்கையாலே பிரகிருதியைச் சேர்ந்த புருஷனுக்கு) ஸ்வபாவமாயிருக்கிற கர்மயோகத்தில்.

48. கூடப்பிறந்த கருமம்—ஸஹஜமாய் (வருத்தமின்றிச் செய்யக்கூடியதாய்) உள்ளகர்மமானது. குறையுறிலும்—துக்கத்தோடுகூடியிருந்ததேயாகிலும். வீடப்படாது—கைவிடத்தகாது. [என்றால், ஞானயோகத்துக்குத் தக்கவனாயினும் கர்மயோகத்தைச் செய்யவேண்டுமென்றபடி.] 'எரியத்தூமம் போல்' என்பதனை 'எரியைத்தூமம்போல்' எனத்திருத்திக்கொள்க. எரியைத்தூமம்போல எல்லா முயற்றியையும் பொல்லாங்கு சூழும் என்க.

49. சன்யாசச் சார்வதனுல்—ஸந்யாஸ ரூபமான வைராக்கியத்தால். வினையகன்ற மேலாம் வியப்பு மேவும்—ஸமஸ்த கர்ம நிவர்த்தி ரூபமான மேலான ஸித்தியைப் பெறுவான்.

50. செவ்வியுறுந் தியானத்தின் சித்தியினைச் சேர்ந்தவவன்–பிரயாணமளவும் நாடோறும் அனுஷ்டிக்கப் படும் கர்மயோகத்தால் உதவி செய்யப்பட்ட ஞான யோகம் ஸித்திக்கப்பெற்றவன். எவ்வாறு பிரமமெய்தினுன்—எந்தப் பிரகாரமிருந்து (தியாந யோகத்துக்குப் பயனுன) பிர்ம்மத்தை யடைகிருன். சுருக்க—சுருங்க.

51. கோதறு சீர்ப்புத்தி—குற்றமற்ற சிறப்பினையுடைய புத்தி, அதாவது ஆத்மாவை யுள்ளபடி யறிகின்ற புத்தி. ஓசை முதற்பொருள்களுள்ளுறவிட்டு—சப்தாதி விஷயங்களைக் கிட்டவொட்டாமல் துறந்து. ஆசை வெறுப்பு அற்று—ராகத்தையும் துவேஷத்தையும் தவிர்ந்து.

52. தக்க தனியாமிடத்துச் சார்ந்து—தியானத்துக்கு விரோதமானவைகளொன்றுமில்லாத தனியான இடத்திலிருந்து. சிறிது உண்டு—அளவுபட மிதமாகவுண்டு. ஒக்க உரை காயம் நெஞ்சு உள்ளொடுக்கி—ஒருங்கே வாக்கு, காயம், மனம் இவற்றின்செயலைஅடக்கி.

எவ்விடத்தும் ஒன்று நசைவிடுதலுற்று—தான் தியானம் பண்ணுகிற தத்துவத்தைத் தவிர மற்றெங்கும் பொருந்துகின்ற நசையைவிட்டு வைராக்கியங்கொண்டு.

53. ஆங்காரம்—தேகமே ஆத்மாவென்கிற அபிமானத்தையும், வன்மை—அது வளர்தற்குக் காரணமான வாஸனையின் பலத்தையும், செருக்கு—அதற்கு நிமித்தமான கொழுப்பையும், காமம், வெகுளி, சுற்றம் தேங்காது—காமத்தையுங் கோபத்தையும் பிடிப்பையுங் கொள்ளாமல், மமதை நெகிழ்ந்து—தனதல்லாத வெல்லாவற்றிலும் தனதென்கிற எண்ணம்போய்.

54. பிர்ம்மாத்கமான ஆத்மாவைப் பரோக்ஷித்தவன் பிரஸந்நமான நெஞ்சையுடையனாய்க்கொண்டு ஒன்றினிழவுக்குச் சோகியான், ஒன்றை யாசைப்படான், ஸர்வபூதங்களிலும் ஸமனாய் என்பக்கல் பரையான பக்தியைப் பெறுகிறபான் என்க.

55. எவன் நான் ஆவேன்—ஸ்வரூபத்தாலும், ஸ்வபாவத்தாலும் நான் எவன் என்றும். எவ்வளவினனவேன்—குணத்தாலும் விபூதியாலும் நான் எவ்வளவினனென்றும், பக்தியால் மெய்யுணர்ந்து—பக்தியால் உள்ளபடியறிந்து.

56. கருமங்களெல்லாம்—நித்திய நைமித்திக கர்மங்களையேயன்றி காம்மியங்களான இதர கர்மங்களெல்

லாவற்றையும். ஒவுதல் இலாப் பதத்தை—அழிவில்லாத பதத்தை அதாவது சாசுவதமான பதத்தை. அற்கமற அடையும்—சிறிதுங் குறைவின்றி யடைவான்.

57. நெஞ்சாற் கருமமெல்லாம் நேராக என்னிடைவைத்து—(என்னுடையவனென்றும், என்னாலாளப்படுமவனென்றும் அறிகின்ற) மனத்தைக்கொண்டு ஸகல கர்மங்களையும் (அந்தந்தக் கருமத்தா லாராதிக்கப்படுந் தேவதைகளோடு சேர்ந்து) நேராக என்னிடத்தில் ஸமர்ப்பித்து. பொருவில்—ஒப்பில்லாத.

58. என்னை நினைந்த நீ—என்பக்கல் நெஞ்சையுடைய நீ. துற்கங்கள்—ஸம்ஸாரத்தால் வரும் ஸர்வ கிலேசங்களையும். கடத்தி—தாண்டி விடுவாய். அமர்ந்து—விரும்பி. கேளாயேல்—(நானே கிருத்தியா கிருத்தியங்களெல்லாவற்றையும் அறியவல்லேன் என்கின்ற எண்ணத்தால் நான் சொன்னதை) கேளாயாகில். நசித்தி–அழிந்துபோவாய்.

59. ஒங்கும் அகங்காரத்தி லுற்றே உயர்சமரம் ஈங்கு முயலேனென்றிருத்தியேல்–(என்னுடைய நன்மை தீமைகளைப்பற்றி எனக்கே அறிந்துகொள்ளும்படியான ஸாமர்த்தியமுண்டு என்பதாக) மிகுந்த அஹங்காரத்தைப் பற்றிக்கொண்டு, 'யுத்தம் செய்யமாட்டேன்'

என்று இங்கு வாளா இருப்பாயாகில். துணிவது மெய்யன்று—உன்னுடைய வ்யவஸாயம் அதாவது நிச்சயம் உண்மையன்றிப் பொய்யாகும். தன்மையது எவும்—உன்னுடைய ஸ்வபாவந்தானே யுன்னை நியோகிக்கும்.

60. தன்மையமர் தன்கருமந்தன்னாற் பிணிப்புண்டு—உன் க்ஷத்திரிய ஜாதிக்கேற்ற சௌரியத்தாற் கட்டுப்பட்டவனாய்க்கொண்டு. அவசனாய்—உன்னையுமறியாமல். செய்வதி நீ—நீ செய்யப்போகிறாய்.

61. ஈசனவனொருவன் எல்லார் இதையமாம் தேசமதில் நிற்கும்—ஸகல பிராணிகளையும் ஆள்வதே ஸ்வபாவனான ஸ்ரீவாசுதேவன் (பிரவிருத்தி, நிவிருத்திகளெல்லாவற்றிற்குங் காரணமான ஞானமுண்டாவதற்கு இடமான) ஹிருதயப்பிரதேசத்தில் இருக்கிறான். மாயையினால்—குணமயமாயிருக்கிற தன் மாயையைக்கொண்டு.

62. ஆனாத—கெடாத. சாயாத—அழியாத. வன்பதம்—பரமபதத்தை.

63. ஞானம்—மோக்ஷார்த்திகளுக்கு வேண்டிய கர்மயோக, ஞானயோக, பக்தியோக விஷயமான

ஞானங்களை. செவ்வாம் மறைப்பொருளை—செவ்வை யான ரஹஸ்யார்த்தங்களை. செப்பினேன்—உபதேசித்தேன. நின் இயல்வால்—உன் அதிகாரத்துக்குத் தக்கபடி.

64. இட்டன்—இஷ்டன். இதமாப் பட்டதனை—இதமாகவுள்ளதை. பரிந்துசொல்வன்—பரிவாகச் சொல்லுவேன்.

65. என்பத்தன் ஆகி—என்னிடத்தில் பிரீதிமானய்க் கொண்டு. என்னை மனனம் பண்—பிரீதிரூபமாயிருக்கிற ஸ்மிருதி பரம்பரையைச் செய். [வேதநம், தியானம், உபாஸனம் முதலிய சொற்களுக்குப் பொருளாய், தரிசனத்துக்கு ஸமானமாயிருக்கும் மிகுந்த பிரீதிரூபமாயிருக்கும் ஸ்மிருதி பரம்பரை யென்க.] அருச்சி—ஆராதனஞ்செய். ஆராதனமாவது—பரிபூர்ண சேஷவிருத்தி. என்னையே மேவுதி—என்னையே யடைவாய். அறுதி—நிச்சயம்.

66. எல்லா அறங்களையும் அறவிட்டு—கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் என்கிற மோக்ஷஸாதனங்களான எல்லாத் தர்மங்களையும் என்னுடைய ஆராதன ரூபமாக மிகுந்த பிரீதியோடு உன் அதிகாரத்துக்குத் தக்கபடி செய்துகொண்டே, கீழ்ச்சொன்ன

படி பலனையும், கர்மத்தையும், கர்த்திருத்வத்தையும் விட்டு. என்னையே சரணமா நண்ணியிடு—ஆராத்ய ஸ்வரூபனை என்னையே பலனாகவும் உபாயமாகவுங் கருதிச்சரணம்புகுவாய். நான் பாவங்களின்றுன்னைப் பற்றுவிடுவிப்பன்—(என்னையடைதற்குவிரோதிகளாய், அநாதி காலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய்ச் செய்யத் தகாவற்றைச் செய்கையும், செய்யத்தக்கனவற்றைச் செய்யாமையுமான) ஸகல பாவங்களினின்றும் நான் உன்னைப்பற்றுவிடுவிப்பேன். தாவந்தனை ஒழி—(ஆகையால்)நீ சோகத்தைவிடு.[பக்தியோகத்தையாரம்பிக்கவொட்டாமல் விரோதிக்குமவைகளாய் அநாதிகாலமாய் ஸம்பாதிக்கப்பட்டவைகளாய், நானாவிதங்களாய் அனந்தங்களாயுள்ள பாபங்களுக்குத்தக்க பிராயச்சித்தரூபங்களாயும், கிருச்சிரம், சாந்திராயணம், கூச்மாண்டம், வைச்சுவாநரம், வ்ராதபிவித்திரேஷ்டி, த்ரிவ்ருதக்நிஷ்டோமம் தொடங்கிப் பலவிதங்களாயும் அனந்தங்களாயும் எத்தனை காலம் ஜீவித்திருந்து அனுஷ்டித்தாலும் அனுஷ்டிக்கவரியவைகளாயுமிருக்கின்ற ஸர்வதர்மங்களையும் விட்டு, பக்தியோகாரம்பம் ஸித்திப்பதற்காகப் பரமகாருணிகனாய்ப் பிராணிகளிடத்தில் ஒரு விசேஷத்தையும் ஆலோசியாமல் அவைகளுக்கெல்லாம் சரணியனாய் ஆச்ரிதர்களிடத்திலுண்டான வாத்ஸல்யத்துக்குக் கடலாயிருக்கின்ற என்னையே சரணாகப்

பற்று. நான் உன்னைக் கீழ்ச்சொன்ன பக்தியோகாரம்பத்திற்கு விரோதிகளான பாபங்களினின்றும் விடுவிக்கின்றேம். நீ அதற்காகச் சோகிக்கவேண்டாம் என்று உரைத்தலுமுண்டு.]

67. இப்பொருளை—(இப்போது நான் உனக்குச் சொன்ன பரமரஹஸ்யமான) இந்த அர்த்தத்தை. இல்லாத் தவத்தாற்கும்—இல்லாத தவத்தையுடையானுக்கும் அதாவது தவம்புரியாதவனுக்கும். என்னைப் பொருதாற்கும்—என் குணங்களைக் கேட்க ஸஹிக்காதவனுக்கும்.

68. மிகவும் ரஹஸ்யமான இவ்வர்த்தத்தை யாவனொருவன் என் பக்தரிடத்தில் பரிவோடு சொல்லுகிறானோ அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தியைச்செய்து ஸந்தேகமில்லாமல் என்னையடைவான்.

69. அவனின்—அவனைப்போல. மேதினியில்—பூமியில். இனியும் உண்டாகப்போவதில்லை யென்பார் எக்காலுமில்லை யென்றார். [அயோக்கியர்களை முந்தியெடுத்தது, இவ்வர்த்தத்தை யோக்கியர்களுக்குச் சொல்லாமலிருப்பதைப் பார்க்க அவர்களுக்குச்சொல்வது மிகவும் அனிஷ்ட மென்கைக்காக வென்க.]

70. நெஞ்சறிவாம் எச்சம்—ஞானயோகம். இறைஞ்சினன்—ஆராதித்தான். எஞ்சலற—குறைவற.

71. சிரத்தையினைச் சேர்ந்து—சிரத்தையோடு கூடி. ஆர்ந்து—விரும்பி. தீர்ந்த துயரற்று—பக்தி விரோதி பிரபந்தங்களினின்றும் விடுபட்டுத் துயரமில்லாதவனாய். மகிழும்—ஸந்தோஷிப்பான்.

72. ஒருமைபற்றியாஞ் சித்தத்தால்—ஏகாக்ரசித்தனாய். சீர்க்க—பெருமைபொருந்த. கழிந்ததே—போயிற்று? இங்கு ஏ, வினாப்பொருளது. சேர்ப்பான்—வினையெச்சம்; சேர்க்கக் காரணமாய் என்பது பொருள்.

73. உன்னுடைய பிரஸாதத்தால் விபரீதஜ்ஞானம் போய் ஞானத்தைப் பொருந்தி மயக்கத்தை யொழித்தேன். சொன்னதெல்லாஞ் செய்வேன் என்க. [தேகாதிகளே ஆத்மாவென்கிற துரபிமானமும், சேதனாசேதன ரூபமான ஸகல பிரபஞ்சமும் பரமபுருஷனுக்குச் சரீரமென்கிற விஷயமுந்தெரியாமல் மாறாக நினைத்திருந்த துரபிமானமும், நித்திய நைமித்திகமான கர்மம் பரமபுருஷனுடைய ஆராதன ரூபமாக அனுஷ்டிக்கப்படுமாகில் அவனை யடைவதற்கு உபாயமாகுமென்கிற விஷயந்தெரியாமல் அதைக்கட்டுக்குடலாக நினைத்திருந்த அஞ்ஞானமுந் தொலைந்தன. ஆத்மா பிரகிருதியின் ஸ்வபாவமின்றி அறிவதே ஸ்வபாவமாய்ப் பரமபுருஷனுக்குச் சேஷப்பட்டு அவனாலாளப்படுவதே ஸ்வரூபமாயிருக்கிறதென்கிறஞானமும், பரம

புருஷனுடைய உண்மையை யறியும்படியான ஞானமும், பரமபுருஷனுக்குப் பிரீதியை வளர்ப்பதான நித்திய நைமித்திக கர்மங்களை யனுஷ்டித்து நிஷித்தங்களை யொழிப்பதாலும், சமம், தமம் முதலிய ஆத்மகுணங்களாலும் பெறவேண்டிய (பக்திரூபமாய்ப் பரிணமித்திருக்கிற) பரமபுருஷோபாஸனத்தால் மாத்திரம் அடையப்படும் பொருளும், வேதாந்த விழுப்பொருளும், பரம புருஷனுமான வாஸுதேவன் தேவரீரே யென்கிற ஞானமும் எனக்கு உண்டாயின என்பதாம்.]

74. இப்படி மகாத்மாவான வாஸுதேவனுக்கும் பார்த்தனுக்கு முண்டான அற்புதமாய் ரோம ஹர்ஷணமான இந்த ஸம்வாதத்தை நான் கேட்டேன் என்க. செவ்வண்ணம் என்றும் பாடம்.

75. யோகத்தை நேரேயருளிச்செய்கிற யோகேசுவரனை கண்ணன் பக்கல் நின்றும் இந்தப் பரமான குஹ்யதமத்தை வியாஸ மகரிஷியினுடைய பிரஸாதத்தாலே கேட்டேன் என்க.

76. ராஜாவே! கேசவார்ஜுனர்களுடைய, புண்யமாய் அத்புதமான இந்த ஸம்வாதத்தை நினைக்க நினைக்க எனக்கு ஸந்தோஷமுள்ளடங்காமல் வருகின்றது என்பதாம்.

77. கிருஷ்ணனுடைய அத்புதமான அந்தரூபத்தை நினைக்க நினைக்க எனக்குப்பெரிய விஸ்மயமுண்டாகாநின்றது. பின்னையும் பின்னையும் பிரீதனாகாநின்றேன் என்க.

78. எங்கே யோகேசுவரனான ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கின்றானோ, அவன் திருவடிகளையே நம்பியிருக்கின்ற வில்லுங்கையுமான அர்ச்சுனன் எங்கே விளங்குகின்றானோ அங்கே தான் லக்ஷ்மியும், விஜயமும், விபூதியும், நீதியும் சாசுவதமாய் நிலைநிற்கும் என்பது என்னுடைய ஸித்தாந்தம்.